Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு + IV

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்,மூக்குக் கண்ணாடியகம்



இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

(சி/2494)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 12 (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:331

## உளவாளிகளுக்கான பாதுகாப்பை ராணுவத்தினரே வழங்கவேண்டும்!

### திலக் ரணவிராஜா தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினருக்கு தகவல்களை வழங்கும் உளவாளிகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இராணுவத்தினருக்கே உள்ளதாக, மக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் சமாதான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு இரகசிய தகவல்களை வழங்கிவந்த நபரான திஸ்வீரசிங்கம் துஸ்யந்தன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு சில கட்சிகள் தமக்குள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காக, ஏனைய தமிழ் அரசியல் கட்சியினரைக் கொலை செய்வதாக தெரிகிறது.

இராணுவ புலனாய்வுப் பிரிவினர் தமது உளவாளிகளிடமிருந்து தகவல்களைப் பெறுகின்றபோது அவர்களுக்கு பாதுகாப்பையும் வழங்கவேண்டுமென்று திலக் ரணவிராஜா மேலும் தெரிவித்தார்.

## உளவாளிகள் எல்லோருக்கும் பாதுகாப்பு வழங்க முடியாது!

### இராணுவப் பேச்சாளர் கைவிரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று அதிகாலை சுட்டுக் கொலைசெய்யப்பட்ட திஸ்வீரசிங்கம் துஸ்யந்தன் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு நீண்டகாலமாக இரகசிய தகவல்களை வழங்கியவர் என்பதை இராணுவப் பேச்சாளர் சுமேத பெரேரா உறுதிப்படுத்தினார்.

நேற்று கொழும்பில் வைத்துக் கொல்லப்பட்ட திஸ்வீரசிங்கம் துஸ்யந்தன் என்ற இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுட்டுக்கொல்லப்பட்ட நபர் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்களை வழங்கி வந்தவர் எனினும், அவர் உத்தியோகபூர்வமாக இராணுவத்தினருடன் இணைக்கப்படவில்லை.

திஸ்வீரசிங்கம் துஸ்யந்தனை விடுதலைப் புலிகளே கொலைசெய்தனர்.

இராணுவத்துக்கு தகவல் தரும் ஒவ்வொருவருக்கும் பாதுகாப்புக் கொடுக்கும் நிலையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும்!

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நாட்டு மக்களின் பாதுகாப்புக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலுக்கு பாதுகாப்புக்குப் பொறுப்பான ஜனாதிபதியும், அரசாங்கமுமே முழுப்பொறுப்பேற்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.**

நேற்று சுட்டுக்கொல்லப்பட்ட

இந்த கொலைச் சம்பவம் பயங்

இடம்பெறுகின்றன.

## யுத்தநிறுத்தத்தைப் பயன்படுத்தி புலிகள் கொலைசெய்கின்றனர்!

### ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து

(கொழும்பு)

**நாட்டு மக்களின் பாதுகாப்புக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலுக்கு பாதுகாப்புக்குப் பொறுப்பான ஜனாதிபதியும், அரசாங்கமுமே முழுப்பொறுப்பேற்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.**

நேற்று சுட்டுக்கொல்லப்பட்ட திஸ்வீரசிங்கம் துஷ்யந்தன், படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த கொலைச் சம்பவம் பயங்கரவாத நடவடிக்கையுடன் தொடர்புடைய சம்பவம் அல்ல. திடீரென இடம்பெறும் விடயம்.

நாட்டில் கொள்ளைகள், கொலைகள், கடத்தல்கள் பாரியளவில் இடம்பெறுகின்றன.

இவ்வாறான சம்பவங்களில் இருந்து மக்களை பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கும் உண்டு. இதிலிருந்து அரசாங்கம் நழுவிச் செல்லமுடியாது.

பொது மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு விலகிச் செல்வதால், நாட்டில் பல்வேறு சம்பவங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் கொலைசெய்கின்றனர்!

## ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை சாதகமாகப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் மனிதப் படுகொலைகளை நடத்திவருவதாகவும், இதனைக் கண்டிப்பதாகவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருந்துவரும் காலத்தில், குறிப்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொலை செய்யப்படுவது அதிகரித்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மெத்தானந்த தேரர் தெரிவித்தார்.

எனவே பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் பொருட்டு கட்சி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் ஒரு பொதுவான கோட்பாட்டுடன் ஒன்றுபட்டு செயற்படவேண்டும். (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஓமந்தை விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

ஓமந்தையில் இருந்து வவுனியா நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரை எதிரே வந்த ஹைஏஸ் வாகனம் மோதியது.

இதன்போது சைக்கிளில் பயணித்த இளைஞர் உயிரிழந்தார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் வவுனியாவைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் கிருஷ்ணகுமார் (வயது 18) என இனம் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை தமிழ் இளைஞர் லண்டனில் சுட்டுக்கொலை!

(லண்டன்)

லண்டனில் நேற்றுமுன்தினம் ஈழத்தமிழர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மோட்டார் ரூபேஸ் என்று அழைக்கப்படும் இவர் வாகனம் ஒன்றில் இருந்தபோதே, சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் அண்மையில் குற்றமொன்றுக்கு சிறைச்சாலைக்குச் சென்று வந்தவராவார்.

லண்டனில் இயங்கும் இரண்டு தமிழ்க் குழுக்களுக்கிடையில் ஏற்பட்டமுறுகலின் அடிப்படையிலேயே இந்தக் கொலை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூலை எட்டாம் திகதி 70 ஆயிரம் பவுண் செலவில் இலங்கைத் தமிழ் இளைஞர் குழுக்களுக்கு எதிராக லண்டன் பொலிஸார் சோதனை நடவடிக்கைகள் மேற்கொண்டதை அடுத்து இடம்பெற்ற முதலாவது கொலைச் சம்பவம் இதுவாகும்.

# இராணுவ உளவாளி ஒருவர் கொழும்பில் சுட்டுக்கொலை!



(கொழும்பு)

இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உளவாளியான தமிழ் இளைஞர் ஒருவர் இனந் தெரியாத துப்பாக்கிதாரிகளால் நேற்று கொழும்பின் புறநகரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் பிபிலியான பொறலஸ்கமுவ என்ற இடத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த திஸ்வீரசிங்கம் துஸ்யந்தன் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

கொல்லப்பட்ட நபர் வீட்டில் தங்கியிருந்த வேளை, கதவை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்த ஆயுதம் ஏந்திய இனந் தெரியாத நான்கு பேர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன் போது - அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதன் பின்னர் வீட்டினுள் கைக்குண்டும் வீசப்பட்டதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் கொகுவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின் போது உயிரிழந்தவரின் மனைவி வீட்டில் தங்கியிருந்த போதிலும் அவருக்கு எந்தவித விபரீதமும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட நபர் மிலேனியம் சிற்றியில் இயங்கி வந்த இராணுவப் புலனாய்வு பிரிவின் இரகசிய செயற்பாட்டு நிலையத்திற்கு தகவல்கள் வழங்கிவந்த முக்கிய நபர்களில் இறுதியாக இவரே எஞ்சியிருந்தாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, இந்தச் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்ட பொலிஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

### யாழ்.பிரதேச செயலக ஏற்பாட்டில்

# தேசிய அடையாள அட்டை, வாக்காளர் இடாப்பு தேவைகளுக்கான நடமாடும் செயலக சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டைப்பகுதி, வண்ணார்பண்ணை, கொட்டடி ஆகிய கிராமசேவையாளர் பிரிவு மக்களுக்கு, வாக்காளர் இடாப்பில் பெயர் சேர்த்தல், தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொடுத்தல் போன்ற சேவைகளுக்கான நடமாடும் சேவையொன்று நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் - தங்கள் வசமுள்ள ஆவணங்களுடன் சமுகமளித்து இந்தச் செயன்முறையின் உச்சப்பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தன் கேட்டுள்ளார்.

இந்த நடமாடும் சேவையில், ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.

# மாட்டின் மிரட்டலில் அதிர்ச்சியுற்றதால்; மாணவன் கிணற்றில் வீழ்ந்து மரணம்!

### வல்வெட்டித்துறையில் சம்பவம்

(வல்வெட்டித்துறை)

தோட்டக்கிணற்றில் வளர்ப்பு மாட்டுக்குத் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தவேளை - அருகில் நின்ற மாடு மிரண்டதால், திடுக்குற்ற மாணவன் ஒருவர் கிணற்றினுள் தவறிவீழ்ந்து உயிரிழந்தார்.

அண்மையில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் - வல்வெட்டித்துறை கொம்மாந்துறையைச்சேர்ந்த சிவராஜா ஜெயராஜ் (வயது 18) என்ற மாணவனே இவ்வாறு உயிழுந்தவராவார்.

கம்பர்மலையில் இடம்பெற்ற இந்த மாணவனின் மரணம் தொடர்பாக பருத்தித்துறை பதில் நீதிவான் சபா.ரவீந்திரன் மரண விசாரணையை மேற்கொண்டார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். மந்திகை ஆதார வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனை செய்து, சாட்சியம் அளித்தார். விசாரணை முடிவில் நீரில் மூழ்கி, மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் மரணம் சம்பவிக்கப்பட்டது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (14)

# சமாதான நீதிவான் நியமனம்



தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் கோவில் பிரதம குரு ஆறுமுகசாமிஐயர் சிவசண்முகம்ஐயர் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் காலஞ்சென்ற ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் கோவில் பிரதமகுரு கதிரிப்பிள்ளைஐயர் ஆறுமுகசாமிஐயரின் ஏக புத்திரராவார். இவர் தனது தந்தையாரால் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடத்தப்பட்டு வந்த கந்தபுராண படிப்பை இப்பொழுதும் தொடர்ந்து நடத்தி வருகின்றார். இவர் செல்வச்சந்நிதி தொண்டைமானாறைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவராவார். இவர் ஆலய திருப்பணிச் சபையின் தலைவராகவும் கடமையாற்றுகின்றார்.

### ஆலயத்துக்குச் சென்று திரும்பிய

# வயோதிப மாதுவின் தங்கச் சங்கிலி இனந்தெரியாத நபர்களால் அபகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

வயோதிப மாதுவின் சங்கிலி - மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களினால், அறுத்துச் செல்லப்பட்ட சம்பவமொன்று கோண்டாவில் கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கோவிலுக்கு வழிபடச்சென்று திரும்பிய வயோதிப மாதுவின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்களினால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது - மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இரண்டு இளைஞர்கள் - வயோதிப மாதுவிடம், சம்பவ இடத்தில் குடியிருக்காத நபரொருவரின் வீட்டு முகவரியைக்கேட்டு விசாரித்துவிட்டு - திடீரென அந்த நபர்கள் வயோதிப மாதுவின் தங்கச்சங்கிலியை அறுத்தனர். உடனேயேவயோதிபமாது கதறியழுத போதும் அயலவர்கள் ஓடிவந்த போது அந்த நபர்கள் தப்பிச்சென்று விட்டனர். (64)

### சயன்ஸ் அக்கடமியின் பரிசளிப்பு விழா

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் அரையாண்டுப் பரீட்சையின் பரிசளிப்பும், கணிப்பீட்டறிக்கை வழங்கல் நிகழ்வும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு எஸ்.ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதமவிருந்தினராக சமூகசேவையாளரும், சமாதான நீதிவானுமான ஆ.தேவராஜா கலந்துகொள்வார்.

### சுண்டிக்குளி அருளப்பர் ஆலய முகப்பு மண்டபத் திறப்பு விழா

சுண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய முகப்பு மண்டபம் திறப்பு விழா இன்று காலை 6.30 மணிக்கு பங்குத்தந்தை அருட்திரு. தொம்மையப்பு யேசுதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு. கலாநிதி.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த மண்டபம் ஆலய பங்கைச் சார்ந்த திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை பீற்றர் யேசுதாசன் குடும்பத்தினரின் அன்பளிப்பு நிதியில் அமைக்கப்பட்டது.


## வர்த்தகக் கண்காட்சி

அண்ணா கோப்பி, அண்ணா உற்பத்திப் பொருட்களை வாங்கி இனாம் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்

அண்ணா

அண்ணா தொழிலகம்

நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-3018) இணுவில்.



## 20 % விசேட கழிவு

யாழ்.வர்த்தகக் கண்காட்சி

27.08.2004 - 29.08.2004

விரையுங்கள் எமது காட்சியறைக்கு

யசோ ஆட்கிரபிக்ஸ் (சி-3020)



நெடுந்தீவு - மத்தி
சென்ஜோன்ஸ் நாடகமன்றமும், நீக்கிலாஸ் கலாமன்றமும் இணைந்து வழங்கும்

## "ஏரோதியாவின் சபதம்"

(நாட்டுக் கூத்து)

நெறியாள்கை:- அண்ணாவியார் சைமன் யேசுதாசன்
காலம்:- இன்று (29.08.2004) ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- மாலை 8.00 மணி
இடம்:- நெடுந்தீவு புனிதயுவானியர் ஆலய தியோகு கலை அரங்கு

தலைமை
திரு.சீயோன் அந்தோனிப்பிள்ளை
(மத்தி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க உபதலைவர்)
பிரதம விருந்தினர்
திரு.செல்லையா மெற்றாஸ்மெயில்
(கலாபூசணம் - பாரம்பரிய கலைகள்)
திரு.கே.எக்ஸ்.செல்வநாயகம்
(உதவி அரசாங்க அதிபர்-ஊர்காவற்றுறை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நிர்வாகத்தினர், உறுப்பினர்கள்.
சென்ஜோன்ஸ் நாடகமன்றம், நீக்கிலாஸ் கலாமன்றம்.

விளம்பர அனுசரணை: ஈழநாடு



### சிறு விளம்பரம்

**தவறிவிட்டது**

த.மு.தர்சிம் என்பவருடைய அடையாள அட்டையும், பேர்சும் அதனுடன் ஒரு தொகைப் பணமும் கடந்த 28.08.2004 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரான்லி வீதியில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஐந்துசந்தி, நாவலர் வீதியிலுள்ள மக்கள் பணிமனையில் அல்லது அதற்கு முன்னுள்ள பலசரக்குக் கடையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (916)

**The Royal College of Jaffna**

ஆங்கிலத்தில் சுலபமாக 6 மாத காலத்தில் கதைக்கப்பயில கட்டணம் மாதாந்தம் 150\=
By:விக்னேஸ்வரன் ஆச்சாரி:
426, (302) K.K.S.வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை (C/2734)



## "உள்ளூர் உற்பத்தியைப் பெருக்கி எனது தேசத்தை வளப்படுத்துவோம்"

- தரமான உள்ளூர் தளபாட உற்பத்திகள்
- 7 % விலைக்கழிவுடன் கூடிய விற்பனை
- யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியில் ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்யவும். தளபாடங்களைக் கொள்வனவு செய்யவும் இன்றே நாடுங்கள்

**Equip Unit Trust E.U.T**

தலைமை அலுவலகம்.
கந்தையா வீதி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
T.P.0777168128
0713273387

E.U.T நிறுவனத்தினர்.

காட்சியறை
கே.கே.எஸ்.றோட், சுன்னாகம்.

(சி-3012)



# மாபெரும் விவசாய கண்காட்சி

✳ தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ✳கால்நடை உற்பத்தி திணைக்களம் ✳விவசாய திணைக்களம் ✳கைத்தொழில் திணைக்களம் என்பன இணைந்து நடாத்தும் மாபெரும் விவசாய கண்காட்சி

இடம் : ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை, வட்டக்கச்சி
காலம் : 01.09.2004 தொடக்கம் - 04.09.2004 வரை

*ஆர்வலர்களே!*

✪ தங்கள் சந்தேகங்களை தீர்ப்பதற்கும், ✪ மேலதிக விவசாய அறிவினைப் பெறுவதற்கும் ✪ சிறந்த தொழில்நுட்ப முறைகளைக் கண்டறிவதற்கும், ✪ செய்கை முறையிலும், ஒளிப்பட, புகைப்படக் காட்சியுடனும், திட்ட விளக்கவுரைகளுடனும் நடைபெறவுள்ளது.

ஆர்வம் உள்ளவர்கள், சிறந்த உற்பத்தியாளர்கள் தங்களிடம் உள்ள விவசாய, கால்நடை உற்பத்திகளை காட்சிக்கு வைப்பதற்கும், விற்பதற்கும் நாடுங்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், வட்டக்கச்சி. (C/2804)

# தமக்கு எதிரான நடவடிக்கைக்கு திட்டங்கள் தீட்டப்படுகின்றனவாம்

## பிரதமர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமக்கு எதிராக நட வடிக்கைகள் எடுப்ப தற்குத் திட் டம் தீட்டப்பட்டு வருவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

எனது பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட இராணுவ கொமாண்டோப் படையினரை நாடாளுமன்றப் பிரதேசத்துக்குள் செல்லத் தடைசெய்தமை, நான் அடிக்கடி பயணம் செய்யும் வீதியில் துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டமை போன்றவையே எனக்கு இந்தச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் செயற்பாடுகளின் மூலம் அரசின் நடவடிக்கைகள் தொடர்பாக நான் மிகவும் ஆச்சரியமடைந்துள்ளேன். பிரதமர் என்ற வகையில் எந்தச் சவால்களுக்கும் முகம் கொடுக்க நான் தயாராகவுள் ளேன்.

ஆனால், பிரதமர் என்ற பதவிக்குள்ள கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு நான் எந்த வேளையிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் எனத் தெரிவித்தார்.

பிரதமரின் கருத்தைக் கேட்டறிந்த அமைச்சர்கள்- பாதுகாப்புப் பிரிவினரால் உண்டாக்கப்படும் இந்தப் பிரச்சினைகள் குறித்துத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி இருவரையும் உடனடியாக அமைச்சர் குழுவைச் சந்திக்க, அழைப்பு விடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்னர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பிரதமர், இந்தச் சம்பவங்கள் குறித்து உடனடியாகச் செயற்பாடுகளை மேற்கொள்ளாது, தகவல்களைப் பெறுவதற்கு தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

அத்துடன் பிரதமருக்கு ஏற்பட்ட இந்த நிலைமை தொடர்பாக அமைச்சர்கள் நீண்டநேரக் கலந்துரையாடலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# தேசிய அடையாள அட்டை பெறுவதில் இறுக்கமான நடைமுறை அமுலாகும்!

தேசிய அடையாள அட்டைகளுக்காக விண்ணப்பிக்கும்போது, ஒவ்வொருவரும் தமது பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பிப்பதை கட்டாயமாக்குவது குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

தேசிய அடையாள அட்டையை வழங்கும் போது -தற்போது நிலவும் மோசடிகளைக் குறைக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கையை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக மக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்கள் கிராம சேவகரிடம் பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை வழங்கும் நடைமுறையே இதற்கு முன்னர் இருந்து வந்தது.

இருப்பினும், கடந்த காலங்களில் தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதில் திணைக்களத்தினுள் இடம்பெற்ற மோசடிகள் குறித்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், இவற்றுக்கு பெரும்பாலும் பிறப்புச் சான்றிதழின் பிரதிகளே பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

# கைதான ஊர்காவல் படையினரை உறவினர்கள் பார்வையிட அனுமதி!

( திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கள்ளப்பத்தைப் பகுதிக்குள் ஆயுதங்களுடன் சென்ற வேளை, விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவற் படையினரையும், அவர்களின் உறவினர்கள் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டது.

திருகோணமலை சம்பூர் விடுதலைப்புலிகளின் அரசியற்துறைச் செயலகத்தில் கைதான ஊர்காவற் படையினரை உறவினர்கள் சந்தித்தனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் திருமலை மாவட்ட பிரதிநிதி பற்றி முன்னிலையில் நேற்றுமுன் தினம் காலை 10 மணி முதல் 11.30 மணி வரை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

கடந்த பத்தாம் திகதி ரங்கன பண்டார, சமிந்த பியசிறி என்ற இந்த இரண்டு ஊர்காவற்படையினருடன் மேலும் ஐந்து பொதுமக்களும் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டபோதும், பின்னர் ஐந்து பொதுமக்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகள் தரப்பில் மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் எழிலன், திருமலை மாவட்ட தளபதிகளில் ஒருவரான குணம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தம்மை விடுதலைப்புலிகள் நன்கு கவனித்து வருவதாகவும், தாம் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் இரண்டு ஊர்காவற்படையினரும் உறவினர்களிடம் தெரிவித்தனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவற்படையினரும், ஆயுதங்களுடன் எமது கட்டுபாட்டுப் பகுதிக்கு வந்த காரணத்தால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரையும், தமிழீழ காவல்துறையினரிடம் நாம் ஒப்படைத்தால், அவர்கள் தமிழீழ நீதிமன்றில் ஆஜர் செய்து விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் உறவினர்களுடன் உரையாற்றும் போது தெரிவித்தார். (10)

## அரசாங்கத்தின்

# நியாயத்துக்குப் புறம்பான செயல்களை ஜே. வி. பி. எதிர்த்துப் பாடுகிறதாம்!

## ஜே. வி. பி. கூறுகிறது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிகளாக இருந்து வரும் ஜே.வி.பி- அரசாங்கத்தின் மீது தொடர்ந்தும் எதிர்க்குரல் எழுப்பிவருவதாக சிறிய மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

ரயில்வே திணைக்களத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற 8 ஆவது சம்மேளனத்தில். கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அரசாங்கம் நியாயத்துக்குப் புறம்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கும் போது, ஜே.வி.பி எதிர்க்குரல் எழுப்பி வருகிறது. தற்போதைய அரசாங்கத்தில் வெளிப்படையான பேச்சுவார்த்தை நடைபெறாமை பெரும் பிரச்சினையாக உள்ளது.

தொழில் அமைச்சரைப் பொறுத்த வரையில் தொழிலாளர்களுக்காக தாம் நினைக்கும் அனைத்தையும் செய்து விடவேண்டும் என்று எண்ணுகிறார். இதேபோன்று நிதியமைச்சர் தானே எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்று எண்ணுகின்றார்.

இதன் காரணமாக ஒவ்வொரு விடயங்களில் தோன்றும் முரண்பாடுகளை வெளிப்படையாக ஆராயும் பொருட்டு, அமைச்சரவைக்குக் கொண்டுவருவதில்லை. இவ்வாறான பிரச்சினைகளே தற்போது நிலவி வருகின்றது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# அரசின் பதில் கிடைக்கும் வரை சமாதான செயற்பாடுகள் தொடராது

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த விருப்பமா? இல்லையா? என்ற கேள்விக்கு அரசாங்கம் விடை தரும் வரை சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது.

இவ்வாறு கடந்த செவ்வாய்க் கிழமை கோட்டே சிறிகோத்தாவில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும்போது, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக தலையிடுமாறு நோர்வே அரசுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தது சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் பிழையானது என ஏற்றுக் கொள்ளப் பட்டதனாலாகும்.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகாரசபை குறித்த ஆலோசனையை பேசசுவார்த்தைக்கு எடுத்துக் கொள்வதற்கு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் உடன்பாடொன்றால் மக்கள் விடுதலை முன்னணியும் அரசின்ஒரு பங்காளியாக உள்ளதனால், அதற்கு உடன்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளின் இடைக்காலத் திட்டவரைபு குறித்து, பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்தால், அமைச்சரவையில் இருக்கும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் அவ்வாறு விரும்பாத அமைச்சர்கள் அமைச்சரவையிலிருந்து விலகிச் செல்ல வேண்டும் எனவும் ரணில் தெரிவித்தார். (தே)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செலவனுக்கும் இடையிலான சந்திப்பு நாளை காலை 10.00 மணிக்குக் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ளது.

# திருமலை இராணுவ முகாம்களை புலிகள் சுற்றி வளைத்துள்ளனராம்

## உளவுப் பிரிவு எச்சரிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை துறைமுகத்தைச் சுற்றி விடுதலைப்புலிகளால் அமைக்கப்பட்ட முகாம்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், யுத்தம் ஏற்படும் சந்தர்ப்பத்தல் படையினரில் அதிகமானோர் வெளியேற வழியின்றி ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என இராணுவ உளவுப்பிரிவு எச்சரித்துள்ளது.

போர் நிறுத்தத்தின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் - திருகோணமலை துறைமுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இராணுவ முகாம்கள் 19 இற்கும் எச்சரிக்கை விடுக்கும் நோக்கில் புதிதாகப் புலிகள் 13 முகாம்களை அமைத்துள்ளனர.

தற்போது சம்பூரில் கொக்கட்டிப் பிரதேசத்தில் இரண்டு முகாம்களும், வாகரைப் பிரதேசத்தில் இரண்டு முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளது, இதன மூலம் உண்டாகும் எச்சரிக்கை மிகவும் பெரியது.

இதன்படி போர்நிறுத்தத்தின் பின் திருகோணமலையில் விடுதலைப் புலிகளால் 17 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், இந்த விடயத்தில் நோர்வே உடனடியாகத் தலையிடட்டு, புலிகளின் முகாம்களை அகற்ற நடவடிகதை எடுக்குமாறு அரசு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளதாம்.

# நோர்வே அரசுக்கு எதிராக அமெரிக்காவில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாம்

## சமாதானத்துக்கான அமைப்பு தெரிவிப்பு

சர்வதேச பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தை மீறி, விடுதலைப் புலிகளுககு உதவி வழங்குவது தொடர்பாக நோர்வே அரசுக்கு எதிராக அடுத்த வாரமளவில் அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்கு இலங்கையின் சமாதானத்துக்கான வாப் (WAP) எனும் அமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்த வழக்கின் எதிராளிக ளாக நோர்வே நாட்டின் பிரதமர் பொன்டவிக், வெளிவிவகார அமைசசர் ஜான் பீற்றர் சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெலக்சன், விசேட பிரதிநிதி எரிக்சொல் ஹெய்ம் மற்றும் புலிகள் இயக் கத்தின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோர் குறிப்பிடப்படவுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தினமும் படுகொலைகளைச் செய்யும் விடுதலைப் புலிகளுக்கு - நோர்வே நாட்டினுள் நிதியுதவி சேகரிக்க அனுமதி வழங்கியமை மற்றும் அதியுயர் தொழில் நுட்ப உபகரணங்களை வழங்கியமை, நோர்வேயிலுள்ள ரேனா என்ற படை முகாமில் பயிற்சிகளை வழங்கியமை மற்றும் பயங்கரவாத இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும் நோர்வே அரசு அனுசரணை வழங்கியமை . உடபட, 20 குற்றச்சாட்டுக்கள் நோர்வே அரசுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் பொருட்டு அமெரிககாவின் பிரபல சட்டத்தரணிகள் மூவர் இந்த அமைப்பின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பயஙகரவாத ஒழிப்புச் சட்டம் தொடர்பாக நோர்வே அரசு கையொப்பமிட்டிருந்தும், அந்தச் சட்டத்தையும் மீறி நோர்வே அரசு செயற்படுகிறது என்பதற்குப் போதிய ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும் என்றும் அந்த அமைப்புக் கூறுகிறது. இந்த வழக்கின் சாட்சியாளர்களாக சர்வதேச பொலிஸார் அழைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# திருமலை மாவட்ட சிங்களவர்களுக்கு கண்காணிப்புக்குழுவால் நன்மையில்லை

## வட-கிழக்கு சிங்கள அமைப்பு கூறுகிறது

(திருகோணமலை)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால், திருமலை மாவட்ட சிங்களவர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லையென வடக்கு-கிழக்கு சிங்கள அமைப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

போர்நிறுத்தம் செயற்படுத்தப்பட்ட நாள்முதல் இன்றுவரை திருமலை மாவட்டத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட சிங்களவர்கள் தொடர்பாக கண்காணிப்புக்குழு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவினால் எமக்கு எவ்வித நன்மையும் ஏற்படவில்லை. எனவே எதிர்வரும் காலத்தில் கண்காணிப்புக் குழுவுக்கு எவ்வித தகவலையும் கொடுக்கப் போவதில்லை.

எனவே, வடக்கு-கிழக்கில் வாழும் சிங்களவர்கள் தமது பாதுகாப்புக்காக ஆயுதங்களை ஏந்தும் நிலை உருவாகும். கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை மொரவேவ கன்னியா, மட்டக்களப்பு கல்லடி, கோமரகடவ போன்ற பகுதிகளிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட ஏழு பேர் தொடர்பாக கண்காணிப்புக் குழுவுக்கு தெரியப்படுத்திய போதும், இதனை கண்காணிப்புக் குழு தட்டிக்கழித்துவிட்டது.

கடந்த பத்தாம் திகதி கோமரகடவையில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட இரண்டு ஊர்காவற் படையினர்கள் தொடர்பாக செய்த முறைப்பாடுகளிலும் எவ்வித பயனுமில்லை. எனவும் அந்த அமைப்பு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது. (தே)

## தென்னாபிரிக்காவுடனான

# நான்காவது போட்டியிலும் இலங்கை அணி வென்றது!



இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் இடம்பெற்றுவரும் ஐந்து ஒருநாள் போட்டித் தொடரில் நான்காவது போட்டி நேற்று தம்புள்ள மைதானத்தில் இடம்பெற்றது. இதில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனால் தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப வீரர்களாக அணித்தலைவர் சிமித், கிப்ஸ் களமிறங்கினர். கிப்ஸ் 27 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, தில்ஹாரவின் பந்துவீச்சில் போல்டானார். அடுத்து வந்தவர் கலிஸ். இவர் 7 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ம.்.றூப்பின் பந்துவீச்சில் போல்டானார்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அந்த அணி சார்பில் அணித்தலைவர் சிமித் 46, கிப்ஸ் 27, றுடோல்ப் 24, பௌச்சர் 27, பொலக், போஜி இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 52, 19 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக இலங்கை அணி 21 ஓட்டங்களைக் கொடுத்தது.

பந்துவீச்சில் தில்ஹார, ம.்.றூப், டில்ஷான் மற்றும் உபுல் சந்தன ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும், லொக்கு ஆராய்ச்சி 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 236 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி 14 ஓட்டங்களைப் பெற்றிருக்கையிலேயே சனத்தின் விக்கெட்டை இழந்தது. சனத் 8 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ரன் அவுட்டானார்.

ஆனாலும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அவிஷ்க குணவர்த்தன 52, ஜயந்த 46, சங்ககார, அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன இருவரும் ஆட்டமிழக்காமல் பெற்ற 74, 48 ஓட்டங்களால் இலங்கை அணி 46.1 ஓவர்களிலேயே வெற்றியிலக்கை அடைந்தது.

பந்துவீச்சில் என்ரினி, பீற்றர்சன் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

நேற்றைய போட்டியில் இலங்கை அணியில் பல மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தது.

அணித்தலைவர் அத்தப்பத்து, சமிந்த வாஸ், நுவான் சொய்ஸா, ரங்கன ஹேரத் ஆகியோர் விளையாடவில்லை. இவர்களுக்குப் பதிலாக அணித்தலைவராக மஹேல ஜெயவர்த்தனவும், தில்ஹார பெர்ணான்டோ, ஜயந்த, லசித் மலிங்க, ம.்.றூப் ஆகியோர் இணைக்கப்பட்டனர்.




# ஏதென்ஸ் ஒலிம்பிக் இன்றுடன் நிறைவு!

(ஏதென்ஸ்)

கடந்த 13 ஆம் திகதி தொடங்கிய ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டி இன்றுடன் நிறைவடைகிறது. இன்று கரப்பந்தாட்டம், வோட்டர் போலோ, மல்யுத்தம், டேக்வாண்டோ, ஹாண்ட்போல், ஜிம்னாஸ்டிக், குத்துச்சண்டை, மரதன் ஆகிய போட்டிகளும், நிறைவு விழாவும் நடக்கிறது.

இன்றைய தடகளப் போட்டியில் 8 இறுதிப்போட்டிகளும், பெண்கள் கரப்பந்து, ஆண்கள் உதைபந்தாட்டம், கூடைப்பந்து இறுதிப்போட்டியும் நடக்கிறது.

## ஏதென்ஸ் ஒலிம்பிக்கின்

# இன்றைய இறுதி நாள் நிகழ்வில் சீனக் கலைஞர் சாகச நிகழ்வு!

(ஏதென்ஸ்)

ஒலிம்பிக் போட்டியின் நிறைவு விழாவில் ரசிகர்களை 8 நிமிடம் பிரமிக்க வைக்கப்போவதாக, சீன திரைப்பட இயக்குநர் ஜாஹ்யிமௌ கூறியுள்ளார்.

28 ஆவது ஒலிம்பிக் போட்டியின் நிறைவுவிழா இன்று ஏதென்ஸ் ஒலிம்பிக் பிரதான ஸ்ரேடியத்தில் நடைபெறுகிறது.

அதில் சீனாவைச் சேர்ந்த புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் ஜாஹ்யிமௌவுக்கு கலை நிகழ்ச்சி நிகழ்த்த ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டி அமைப்புக்குழு வாய்ப்பளித்துள்ளது.

மிகப்பெரிய விழாவில் கலை நிகழ்ச்சி நடத்த 8 நிமிடம் எனக்கு வாய்ப்பளித்துள்ளனர். அப்போது உலகமே அதிர்ச்சியடையும் படியாக நிகழ்ச்சியை வெளிப்படுத்துவேன்.

சீனக் கலையும் சர்வதேச தரம் வாய்ந்தது என்பதை அப்போது நிரூபித்துக் காட்டுவேன் என கூறினார்.

அவருடன் 130 சீனக் கலைஞர்கள் நிகழ்ச்சியில் ஈடுபடவுள்ளனர்.

அதற்கு முன்னதாக 29 ஆவது ஒலிம்பிக் போட்டியை நடத்தும் சீனாவுக்கு ஒலிம்பிக் கொடியை வழங்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.




## நீளம் தாண்டுதல் போட்டியில்

# பதக்கம் பெறலாமென இருந்த இந்தியாவின் கனவு கலைந்தது



ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு மற்றொரு பதக்கம் பெற்றுத்தருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நீளம் தாண்டுதல் வீராங்கனை அஞ்சு பாபி ஜோர்ஜ் 6 ஆவது இடத்தையே பிடித்தார்.

வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் தனது முதல் வாய்ப்பில் 6.83 மீற்றர் தொலைவுக்குத் தாண்டினார்.

முன்னதாக புதன்கிழமை நடைபெற்ற தகுதிச்சுற்றில் 6.69 மீற்றர் தொலைவுக்கு தாண்டி இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்றிருந்தார்.

இறுதியில் பங்கேற்ற 12 பேரில் அவர் 6 ஆவது இடத்தைப் பிடித்தார்.

முதல் வாய்ப்பில் 6.83 மீற்றர் தொலைவைத் தாண்டியவர், அதைத் தொடர்ந்து 2 ஆவது வாய்ப்பில் 6.75 மீற்றர் தாண்டினார். 3 ஆவது மற்றும் 6 ஆவது வாய்ப்பை அவர் பவுல் செய்தார். 4 ஆவது வாய்ப்பில் 6.68 மீற்றர், 5 ஆவது வாய்ப்பில் 6.61 மீற்றர் தாண்டினார்.

# கரப்பந்தாட்டப் போட்டி; இறுதிப்போட்டியில் இத்தாலி

ஆண்கள் கரப்பந்தாட்ட அரையிறுதி ஆட்டமொன்றில் இத்தாலி - ரஷ்ய அணிகள் மோதின. இதில் இத்தாலி 3-0 என்ற கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

வோட்டர்போலோ போட்டியின் ஒரு அரையிறுதியில் ஹங்கேரி - ரஷ்ய அணிகள் மோதின. இதில் ஹங்கேரி 7-5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் சேர்பியா 7-3 என்ற கோல் கணக்கில் கிரீஸ் அணியைத் தோற்கடித்தது. இறுதிப்போட்டியில் ஹங்கேரி - சேர்பிய அணிகள் மோதுகின்றன.

# தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பும்

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கியின் ஆதரவில் யாழ். மாவட்ட தாச்சி சங்கம் நடத்தும் தாச்சி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு விழாவும் சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று மாலை நான்கு மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தாச்சி சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வங்கி முகாமையாளர்கள் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய இறுதிப்போட்டியில் பெண்கள் பிரிவில் - பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

ஆண்கள் பிரிவில் - இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவாலி தென்றல் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இதன்பின்னர் ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட - கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையில் சிநேகபூர்வ போட்டியும் இடம்பெறவுள்ளது.

பின்னர் வெற்றிபெறும் அணிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும்.

# கம்பு ஊன்றிப் பாய்தல் போட்டி; அமெரிக்க வீரர் புதிய சாதனை!



ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான கம்பு ஊன்றிப் பாய்தல் பந்தயத்தில் அமெரிக்க வீரர் டிம்மேக் தங்கப் பதக்கம் பெற்றதோடு புதிய சாதனையும் படைத்தார்.

அவர் 5.95 மீற்றர் உயரம் தாண்டினார். இதற்கு முன்பு 1996 ஆம் ஆண்டு அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியில் அன்ட்ரே (ஜெர்மனி), இகோர் (ரஷ்யா), ஜியான் (பிரான்ஸ்) ஆகிய மூவரும் 5.92 மீற்றர் உயரம் தாண்டியதே சாதனையாக இருந்தது. மற்றொரு அமெரிக்க வீரர் ஸ்ரீவன்சன் 5.90 மீற்றர் உயரம் தாண்டி வெள்ளிப் பதக்கமும், அமெரிக்க வீரர் கிபிலிஸ்கோ 5.85 மீற்றர் உயரம் தாண்டி வெண்கலப் பதக்கமும் பெறறனர்.

இதேபோல் 110 மீற்றர் தடை தாண்டும் ஓட்டத்தில் உலக சாதனை சமன் செய்யப்பட்டது. சீன வீரர் லியூ யாங் 12.91 வினாடியில் கடந்து உலக சாதனையை சமன் செய்தார். 1993 ஆம் ஆண்டு இங்கிலாந்து வீரர் கோலின் 12.91 வினாடியில் கடந்து இருந்தார். ஒலிம்பிக் தடகள போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற முதல் சீன வீரர் என்ற பெருமையை லியூ பெற்றார்.

டெரஸ் டிராம்மெல் (அமெரிக்கா) 13.18 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கமும் கார்சியா (கியூபா) 13.20 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

பெண்களுக்கான ஈட்டி எறியும் போட்டியில் கியூபாவைச் சேர்ந்த மெனின்டஸ் 71.53 மீற்றர் தூரம் வீசி புதிய சாதனை படைத்தார்.

சிட்னி ஒலிம்பிக்கில் நோர்வே வீராங்கனை டிரின் 68.91 மீற்றர் தூரம் வீசியதே சாதனையாக இருந்தது. ஸ்டெபி (ஜெர்மனி) 65.82 மீற்றர் தூரம் வீசி 2 ஆவது இடத்தையும், மிரிலா (கிரீஸ்) 64.29 மீற்றர் தூரம் வீசி 3 ஆவது இடத்தையும் பிடித்தனர்.

நீளம் தாண்டும் போட்டியில் ரஷ்யா ஆதிக்கம் செலுத்தியது. முதல் 3 இடங்களை அந்த நாட்டு வீராங்கனைகளே பிடித்தனர்.

டாட்யானா லெபடேவா 7.07 மீற்றர் தாண்டி தங்கமும், கிரினா 7.50 மீற்றர் தாண்டி வெள்ளியும் கோடாவா 7.05 மீற்றர் தூரம் தாண்டி வெண்கலமும் பெற்றனர்.

10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் சீனாவுக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது. அந்நாட்டைச் சேர்ந்த ஜியாங் 30 நிமிடம் 24.36 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்தார்.

எத்தியோப்பியாவைச் சேர்ந்த டிபாபா 30 நிமிடம் 24.98 வினாடியில் கடந்து 2 ஆவது இடத்தையும், கடந்த ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்ற துலு (எத்தியோப்பியா) 30 நிமிடம் 26.42 வினாடியில் கடந்த 3ஆவது இடத்தையும் பிடித்தனர்.

பெண்களுக்கான 4X100 மீற்றர் தொடர் ஓட்டத்தில் ஜமேக்காவுக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது. லோரன்ஸ், சிம்சன், பெய்லி, கம்பெல் ஆகியோரைக் கொண்ட ஜமேக்கா அணி பந்தயத் தூரத்தை 41.73 வினாடியில் கடந்தது.

ரஷ்யா 42.27 வினாடியில் கடந்து வெள்ளியும், பிரான்ஸ் 42.54 வினாடியில் கடந்து வெண்கலமும் பெற்றன.

4X100 மீற்றர் தொடர் ஓட்டத்தின் தகுதிச் சுற்றில் ராஜ்வீந்தர் கபூர், பீனாமோள், சித்ரா, மஞ்சித்கவூர் ஆகியோரைக் கொண்ட இந்திய அணி 3 நிமிடம் 26.89 வினாடியில் கடந்து இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது.

## பெண்கள் கூடைப்பந்து

# அமெரிக்கா - அவுஸ்ரேலியா இறுதிப்போட்டியில் மோதல்

(ஏதென்ஸ்)

பெண்கள் கூடைப்பந்துப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடந்தன. ஒரு ஆட்டத்தில் அமெரிக்கா 66-62 என்ற புள்ளிக் கணக்கில் ரஷ்யாவைத் தோற்கடித்து.

மற்றொரு ஆட்டத்தில் அவுஸ்ரேலியா 88-75 என்ற கணக்கில் பிரேசிலைத் தோற்கடித்தது.

ஆண்கள் பிரிவு அரையிறுதி ஒன்றில் ஆர்ஜென்ரீனா 89-81 என்ற புள்ளிக் கணக்கில் அமெரிக்காவை தோற்கடித்தது.

## திலீபன் நினைவுதினத்தை முன்னிட்டு

# விளையாட்டுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரல்!

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்.கேணல் திலீபன் நினைவு எழுச்சிநாள் நிகழ்வின் ஒரு பகுதியாக திலீபன் ஞாபகார்த்த சுற்றுக் கேடயங்களுக்கான யாழ்.மாவட்ட ரீதியில் உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட, ஆண் - பெண்களுக்கான தாச்சி, ஆண்கள் சைக்கிள் ஓட்டம், ஆண் - பெண்களுக்கான மரதன் ஓட்டம் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

உதைபந்தாட்டப் போட்டிகள் தெரிவுசெய்யப்பட்ட முன்னணி கழகங்களுக்கிடையேயும், ஏனைய போட்டிகள் யாவும் திறந்த போட்டிகளாகவும் நடைபெறும்.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள்/தனிநபர்கள் தங்கள் விண்ணப்பப் படிவங்களை பரமேஸ்வரா சந்தியிலுள்ள சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்தில் பெற்று அவற்றை பூர்த்திசெய்து செப்ரெம்பர் 03 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தியாகி லெப்.கேணல் திலீபன் நினைவுநாள் விளையாட்டு ஏற்பாட்டுக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகம் அறிவித்துள்ளது.

# வேலையற்ற அனைத்துப்பட்டதாரிகளுக்கும் பொருத்தமான துறையில் வேலை வாய்ப்பு

## ஜயந்த தனபால அரச அதிபருக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் பொருத்தமான பதவிகளில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக, அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால - யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனுக்கு அறிவித்தார்.

யாழ்.குடாநாட்டுக்கு அண்மையில் வந்திருந்த சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிடம், யாழ்.மாவட்ட பட்டதாரிகளுக்கு ஏற்பட்டுள்ள சிக்கலான நிலமைகள் குறித்து அரச அதிபர் விளக்கினார்.

பட்டதாரிகள் நிலைப்பாடு தொடர்பாக சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இதன்போது அரசாங்க திணைக்களங்களில் பல்வேறு பதவிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், இந்த வெற்றிடங்களுக்கு வேலையற்றிருக்கும் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும், ஜனாதிபதி ஜயந்த தனபாலவிடம் உறுதியளித்துள்ளதாக அரச அதிபர் வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டது.

### வீதி விபத்து தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்தைத் தடுப்பது சம்பந்தமாக, அரச ஊழியர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் - நாளை யாழ். போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் வீதி விபத்தைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

இந்த நிகழ்வை யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

## திருத்தப்படாத வீதியால் மக்கள் பெரும் சிரமம்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி சந்தியிலிருந்து, செம்பியன் பற்று வரையிலான 2 கிலோமீற்றர் நீளமான வீதி - மிகவும் மோசமாகப் பழுதடைந்துள்ளதாகவும், போக்குவரத்துச் செய்ய முடியாதிருப்பதாகவும், இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி கடந்தகால போர் நடவடிக்கையால் மிகவும் பாதிப்படைந்தது. இந்த வீதிக்கு அருகிலுள்ள பற்றைகள் வீதியை மூடுமளவுக்கு வளர்ந்துள்ளன.

இதனால், இந்த வீதி ஒற்றையடிப் பாதையாக மாறுமளவுக்கு உள்ளது. இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீவிர கவனம் செலுத்தி, இந்த வீதியை உடனடியாகத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (14)

# மிருசுவில் குடியேற்றத் திட்டத்துக்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு - படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்துக்கு, உடனடியாக மின்சாரம் வழங்கக்கோரி, இந்தப் பகுதி மக்கள் பலதரப்புகளுக்கும் மகஜர் மூலம் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

1990 ஆம் ஆண்டுக்குப்பின் ஏற்பட்ட வன்செயல்களினால் இடைநிறுத்தப்பட்ட மின்சாரத்தை மீண்டும் தங்களுடைய பகுதிக்கு வழங்க வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை மின்சாரசபை, தென்மராட்சிப் பிரதேச செயலர், யாழ்.அரசாங்க அதிபர், யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு மகஜர் வழங்கி பல மாதங்களாகியும் இதுவரையும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என குடியேற்றத்திட்ட மக்கள் தெரிவித்தனர். (17)

## சின்னஞ்சிறு செய்திகள்

### சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவும்

யாழ். இந்துக் கல்லூரியில் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தொலைநகல் கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் தமது சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தப் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த தே.விஜிதா (ஆங்கிலம்), சி.பாலசிறி (ஆங்கிலம்), க.தர்மசலன் (வர்த்தகம்), க.வசுமதி (இந்து சமயம்), யோ.நிரஞ்சனாதேவி (இந்துசமயம்), கி.புவனேஸ்வரி (விஞ்ஞானம்) ஆகியோரது சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றதாகவும், அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் சிரேஷ்ட போதனாசிரியர் தெரிவித்தார். (லெ)

### தலைமைத்துவப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மனித நடுநிலை முன்னேற்ற நிலையத்தின் (கியூடெக்) வடமராட்சிப் பகுதிக் குழுக்களின் இரண்டாம் கட்ட தலைமைத்துவப் பயிற்சி இன்று காலை 9.30 மணியிலிருந்து மணற்காடு அந்தோனியார் கோயில் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியை அருட்தந்தை றோய், அருட்சகோதரன் றொகான், தேசிய ஊக்குவிப்பு இணைப்பாளர் யோசெப்பாலா, வடமராட்சி ஊக்குவிப்பாளர் மரியராசா மற்றும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (20)

### பொலிகண்டி ஆலய இரதோற்சவம்

பொலிகண்டி உப்புக்கிணற்றடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 10 தினங்கள் வெகு சிறப்பாக நடந்து வருகிறது. இன்று தேர்த் திருவிழாவும், நாளை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (14)

### வல்லிபுர ஆழ்வார் கோயிலில் நல்லை முதல்வர் அருளுரை

வடமராட்சி வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பெரியாழ்வார் ஆசிரமத்தில் நடைபெற்று வரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில், இன்று முற்பகல் 11 மணியளவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் அருளுரை இடம்பெறும். (20,14)

### மாணவ தாதிமார் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

க.பொ.த உயர்தரத்தில் 2002, 2003 ஆம் ஆண்டு பரீட்சைகளில் விஞ்ஞானப் பிரிவில் தோற்றி, மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களிடமிருந்து மாணவ தாதியர் பயிற்சிநெறிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களை இந்தமாதம் 27 ஆம் திகதிய 1356 ஆம் இலக்க அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம். (31)

# தகுதியான அனைத்துப் பட்டதாரிகளினதும் பெயர்கள் இரண்டாவது பட்டியலில் வெளியிடப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்த, தகுதியான பட்டதாரிகளின் பெயர்கள் தொழிற்பயிற்சிக்காக 2 ஆவது பட்டியலில் வெளியிடப்படவுள்ளது.

முதலாவது பட்டியலில் பெயர்கள் வெளியிடப்பட்டவர்களைத் தவிர, மிகுதி அனைத்துப் பட்டதாரிகளினதும் பெயர் விபரங்கள் இம் மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்படும் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி அமைச்சர் உறுதிமொழி வழங்கியுள்ளதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் பட்டதாரிகள் சங்கத்தினால் சில பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடிய பொழுது, இவற்றை அவர் தெரிவித்தார்.

45 வயதுக்கு மேற்படாதவர்களும், நிரந்தர பணியில் இல்லாதவர்களுமான - தகுதியான பட்டதாரிகள் அனைவருக்கும் 2 ஆவது பட்டியல் மூலம் நியமனம் வழங்கப்படும்.

இதுவே இறுதிப் பட்டியலாக அமையும். இதன் மூலம் அனைவருக்கும் வேலைவாய்ப்பு பயிற்சி வழங்கப்படும். இதன்போது வழங்கப்படும் நியமனமானது, அனைவருக்கும் ஒரே திகதியைக் கொண்டதாகவே அமையும். எனவே, இதில் பட்டதாரிப் பயிலுனர்கள் குழப்பம் அடையத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பட்டதாரிகள் சங்கத் தலைவர் - தாம் 2 ஆவது பட்டியலை மூப்பு அடிப்படையில் வழங்கவேண்டுமென கோரியதாகவும், அனைத்துப் பட்டதாரிகளுக்கும் இந்த நியமனம் வழங்கப்படவுள்ளதால், 2 ஆவது படடியல் வெளியிடும் வரை காத்திருப்பதுடன், இந்தச் சந்திப்பில் உயர் தேசிய டிப்ளோமா மற்றும் நுண்கலை டிப்ளோமாதாரிகளின் பிரச்சினை தொடர்பாகவும் உரையாடியதாகக் கூறினார். (205)



அண்மையில் மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட இறுதி ஆட்ட நிகழ்வில் ஜனசக்தி முகாமையாளர் டி.ஜசன் ஜெயகுலராஜா மங்கல விளக்கேற்றுவதையும் மற்றும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கே.பாப்பா மற்றும் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி றொகான், நிகழ்வில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம்.



அண்மையில் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாசாலையில் இடம்பெற்ற ஆக்கப்பொருள் கண்காட்சியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர் ஆசிரியர்களைப் படத்தில் காணலாம். (24)

### மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே ரெலிக்கொம் இணைப்புகள்

புதிதாக ரெலிகொம் இணைப்புக்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இணைப்பு வழங்குவது மட்டுப்படுத்தப் பட்டுள்ளது என யாழ். பிராந்திய ரெலிக்கொம் பொதுமுகாமையாளர் எஸ்.சரவணபவன் தெரிவித்தார்.

இதுவரை 7 ஆயிரத்து 90 இணைப்புகள் யாழ். குடாநாட்டில் வழங்கப்பட்டுள்ளன எனவும், புதிய தொலைபேசி இணைப்புக்கோரி இதுவரை 15 ஆயிரத்து 637 பேர் விண்ணப்பித்து விட்டு, காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் அரச திணைக்களங்கள் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே இணைப்புக்கள் வழங்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பழைய மாணவர் சங்க நிர்வாகத் தெரிவு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது. பழைய மாணவர் சங்கத் தலைவராக இலங்கை வங்கியின் வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டார்.

உபதலைவர்களாக என்.தங்கராஜா, எஸ்.சிவகுமார், எஸ்.நடராஜலிங்கம், வின்சென்டீபோல், எம்வேதாபரணம் ஆகியோரும் - இணைச் செயலாளர்களாக கே.வி.செலவராஜன், கே.அருளானந்தம் ஆகியோரும் - பொருளாளராக கே.தவநேசனும், உதவிப் பொருளாளராக ஆர்.இராசசீலனும் தெரிவுசெய்யப்பட்டனர். (14)

# முகாமைத்துவ சேவைகள் தொடர்பான போட்டி

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களை மேம்படுத்தும் முகமாக அவற்றுக்கிடையே முகாமைத்துவ சேவைகள் வழங்குதல் தொடர்பான போட்டி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி ஆரம்பித்த இந்தப் போட்டி எதிர்வரும் 3 ஆம் திகதி வரை இடம பெறவுள்ளது.

இதில் ஒவ்வொரு பிரதேசசபைகளையும் ஆய்வுசெய்து, அவற்றில் சிறப்பாகச் செயற்படும் பிரதேச சபை தெரிவுசெய்யப்பட்டு, அறிவிக்கப்படவிருக்கிறது.

இந்த ஆய்வின்போது, ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களினதும் அலுவலகங்களின் நிலை, அங்குள்ள ஊழியர்கள், ஆவணங்களின் நிலை என்பன ஆய்வு செய்யப்பட இருக்கிறது.

இந்த ஆய்வுக்காக திருகோணமலையிலுள்ள தலைமை அலுவலகத்திலிருந்து அதிகாரிகள் வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### நன்கொடை பெறுவோர் தொடர்புகொள்ளவும்

வலிகாமம் தென்.மேற்கு மானிப்பாய் பிரதேசசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான, 2004 ஆம் ஆண்டு நன்கொடைகள் வழங்கப்படவுள்ளன.

இதுவரை பரிசோதனைப் படிவங்களை அனுப்பாதவர்கள் - எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் பரிசோதனைப் படிவங்களை அனுப்புமாறும், பரிசோதனைப் படிவங்களைப் பெறத் தவறியவர்கள் உள்ளூராட்சி உதவியாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்தார். (91)

# பளைக் கல்விக் கோட்டத்தில் மூன்று புதிய கட்டடங்கள் அமைக்க நிகொட் உதவி

(தென்மராட்சி)

பளைக் கல்விக்கோட்டத்தில் மூன்று பாடசாலைகளுக்கு புதிதாக வகுப்பறைக் கட்டடத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளன.

மாசார் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் வகுப்பறைத் தொகுதிகளும், சோரனபற்று கணேசா வித்தியாலயத்தில் இரு மாடிக் கட்டடமும் அமைக்கப் படவுள்ளது.

இந்தக் கட்டடங்களை அமைக்க நிகொட் நிறுவனத்தின் காப் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் கடந்தகால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்து, தற்போது தற்காலிக கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன.

இதேவேளை பளை மத்தியகல்லூரியில் அமைக்கப்பட்டுவந்த விஞ்ஞான கூடம் மற்றும் நூலகம் ஆகியவற்றுக்கான கட்டடவேலைகள் அனைத்தும் பூர்த்தியாகும் நிலையில் உள்ளதாகவும் தெரியவருகிறது. (14)

# விளையாட்டு அரங்கம்



## தங்கம் என்ன தமிழ் சினிமாவா?



தோல்வீ நிலையென

உலகிலேயே அதி சிறந்த ஹொக்கி அணி களில் ஒன்றான இந்திய ஹொக்கி அணி நியூஸிலாந்து அணியுடனான போட்டியின் போது தோல்வியைத் தழுவிக் கொண்டதன் மூலம் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் பெறும் வாய்ப்பை இழந்துள்ளது.

ஒலிம்பிக் வரலாற்றிலே எட்டுமுறை தங்கம் வென்ற ஒரே அணி என்ற பெருமையுடன் ஏதென்ஸ் சென்ற இந்திய ஹொக்கி அணி - தங்கப்பதக்கத்துடனேயே நாடு திரும்பும் என்றே அனைவரும் எதிர்பார்த்தனர்.

ஏற்கனவே அவுஸ்ரேலிய அணியுடனான போட்டியில் தோல்வியைத் தழுவிக் கொண்ட இந்திய ஹொக்கி அணி நியூஸிலாந்து அணியை வென்றே ஆகவேண்டும் என்ற நிலையில் களம் இறங்கியது.

தன்ராஜ்பிள்ளை, விக்ரம்பிள்ளை, டிலீப் போன்ற அதிசிறந்த அனுபவம் வாய்ந்த வீரர்களைக் கொண்ட இந்திய அணிக்கு நியூஸிலாந்து அணி பெரும் சவாலாகவே அமைந்தது.

முதலாவது பாதி ஆட்டத்தில் கோலைப் போடுவதற்காக இரு அணிகளும் பகீரதப் பிரயத்தனம் செய்தன. ஆனால் இரண்டு அணிகளாலும் கோல் போடமுடியவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் முதலாவது நிமிடத்தில் நியூஸிலாந்து அணியின் முன்னணி வீரர் ஹெய்டன்ஷா இந்திய அணியின் பின்னணி வீரர்களிற்குத் தண்ணிகாட்டிவிட்டு அருமையானதொரு கோலைப் போட்டார்.

போட்டியின் 62 ஆவது நிமிடத்தில் இந்திய அணிக்குக் கிடைத்த பனால்டி கோணரை தனது அனுபவ முதிர்ச்சியால் அபாரமான ஒரு கோலாக மாற்றினார் இநதிய அணிவீரர் தன்ராஜ்பிள்ளை.

இதனைத் தொடர்ந்து ஆட்டம் விறுவிறுப்பு அடையவே ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் நியூஸிலாந்து அணி வீரர்களுக்கு பனால்டி கோணர் ஒன்று கிடைத்தது.

கடைசி நிமிடத்தில் நியூஸிலாந்து அணி கோல் போடுவதைத் தடுப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்த இந்திய அணியினர் ஹொக்கிப் போட்டியின் விதிமுறைகளைக் கவனத்திற்கொள்ளவில்லை.

நியூஸிலாந்து அணியின் பனால்டி கோணரைத் தடுக்க இந்திய அணி வீரர் திலிப் "டி லைனில்" வைத்து பந்தினை ஸ்கூப் பண்ணினதால் 'ஸ்கூப் இன்ருமான்' என்ற விதிமுறைக்கு அமைய, மீண்டும் ஒரு பனால்டிக் கோணரை நியூஸிலாந்து அணிக்கு வழங்கினார் நடுவர். அதனையும் கோலாகாமல் தடுக்க முற்பட்ட இந்திய வீரர் ஒருவர் காலாலே பந்தைத் தடுத்து விட்டார். இந்தச்சந்தர்ப்பத்திலே ஆட்ட நேரம் முடிவடைந்துவிட்டது. ஆனாலும் நடுவர் மீண்டும் வழங்கிய பனால்டி கோணரை கோலாக்கியதன் மூலம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது நியூஸிலாந்து அணி.

ஆட்டம் முடிவடைந்த பின்னரும் பனால்டி கோணரை வழங்கியது தவறு என நடுவர் சேவியரிற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினர் இந்திய அணியினர்.



இந்தியா மாத்தியோசிக்கணும்

ஆனால் ஹொக்கிப் போட்டி விதிமுறைகளுக்கு அடைய டி லைனிற்கு உள்ளே இடம்பெறுகின்ற ஒவ்வொரு தவறுகளும் கோலாகும் சந்தர்ப்பத்தை தடுத்ததாகவே கருதப்படும். எதிரணியின் கோலாக்கும் முயற்சியை முறையற்ற வகையில் தடுத்து நிறுத்தினாலோ அல்லது எதிரணி வீரருக்கு பாதகமான முறையில் ஆடினால் கூட பனால்டி ஸ்கூப்பிங் வழங்க முடியும்.

இந்தநிலையில் இறுதிப் பனால்டி கோணரை இந்திய அணி வீரர்கள் முறையற்ற வகையில் தடுத்தமை கோலைத் தடுத்தாகக் கருதி, நடுவர் மீண்டும் பனால்டி கோணர் வழங்கியமை சரியானதே. ஏனெனில் பனால்டி கோணரைத் தொடர்ந்து இந்திய வீரர்கள் முறையற்ற விதத்தில் தடுத்த போது நடுவர் வேண்டுமென்றே தடுப்பதாகக் கருதிகூட "பனால்டி ஸ்கூப்பிங்" வழங்கியிருக்கலாம். இந்த விடயத்தில் ஆட்ட நேரம் முக்கியமானதல்ல. கோல் போடும் வாய்ப்பே முக்கியமானதாகக் கருதப்படும்.

எனவே இந்திய ஹொக்கி அணியினர் தமது தவறுகளுக்கு நியாயம் காணமுற்படுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

**- லெஸ்லி.**

## முற்றிய மனோவியாதி

ஏதென்ஸ் ஒலிம்பிக் வெற்றிகரமாக நடைபெற்று முடியவேண்டும் என்று கிரேக்க நாடு வேண்டாத தெய்வமே இல்லை. அதுவும் தீவிரவாதச் செயல்கள் எதுவும் ஏற்பட்டுவிடக்கூடாதே என்று எத்தனையோ கோடிகோடியாக ரூபாய்களைக் கொட்டி பாதுகாப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருக்கின்றது.



இந்த வேளையில் தான் ஒரு பத்திரிகை நிருபர் தன் வீரதீரத்தைக் காட்டியிருக்கின்றார். அதாவது பாதுகாப்பு நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகளை தன்னையே ஆதாரமாகக் கொண்டு கண்டுபிடித்தது மட்டுமல்ல, உலகம் முழுவதற்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றார். சரியான ஆதாரங்கள் எதுவும் இன்றி இந்தப் பத்திரிகையாளர் பிரதான அரங்கில் ஒருவேலையைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார். அந்த அரங்கம் திறக்கப்படும் வரை அங்கேயே வேலையும் பார்த்துக்கொண்டிருந்ததாகவும் கூறுகிறார். மேலும் மூன்று போலிப் பார்சல்களை அரங்கினுள் வைத்தாராம். ஆனால் அதுகண்டு பிடிக்கப்படவில்லையாம். மேலும் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகளின் போது பிரித்தானிய பிரதமர் ரொனி பிளெயர் மற்றும் மிகப் பிரபல்யங்களுக்குப் பக்கத்தில் 20 மீற்றர் தொலைவில் தன்னால் நிற்க முடிந்ததாம். இப்படியாகப் பாதுகாப்பு ஓட்டைகள் பலவற்றைச் சுட்டிக் காட்டிக் கொண்டே போகிறார் அந்தப் பத்திரிகையாளர்.




இதையா குழப்புவது

இப்போதுள்ள கேள்வி இபபடியானதொரு பம்மாத்துச் சாதனை உமக்குத் தேவையா என்பதுதான். இல்லாத சிந்தனையையும் உருவாக்கும் செயல் இது என்று ஏன் இந்தப் பத்திரிகையாளருக்குப் புரியவில்லை. எல்லாமே உங்களுக்கு வேடிககையும் மற்றவரின் உயிரின் ஊசலாட்டத்தில் சாதனையும் தானா. இவர் உலக நிகழ்வொன்றின் வெற்றிக்கு உண்மையாக உழைப்பவராக இருந்தால் பொறுப்பதிகாரிகளிடம் இதுபற்றி எடுத்துக் கூறியிருக்கலாம். அதை விடுத்து இப்படியான போலிப் பிரபல்யங்கள் அடைய முற்படுவது வெட்கக்கேடானதாகவே தெரிகிறது. அவனவன் வாழ்க்கையில் ஆயிரம், ஆயிரம் துன்பங்கள். இவர்களுக்கு அது வேடிக்கை.

**- ஜெயா.**

## கைமாறும் காலங்கள்

பதினேழு நாட்கள் நடைபெறும் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக ளில் இதுவெறும் பத்துச்செக்கன்களுக்குள் முடிந்துவிடும் நிகழ்ச்சி தான். ஆனால் ஒலிம்பிக் திருவிழாவின் முதன்மை நிகழ்ச்சியும் அதுதான் என்பதை யாரும் மறக்கமாட்டார்கள். உலகின் வேகமான மனிதனை நிர்ணயிக்கும் நிகழ்ச்சியும் அதுதான். ஷோண் குறோபோட் தனக்கே தங்கம் என்று கொக்கரித்துக் கொண்டிருந்தார். மொறஸ் கிறினும் குறைவல்ல. பிரான்சிஸ் ஒபெக் வெலுவும் ஒரு கனவில் மிதந்தவர் தான். கிம்கொலின்சும் ஒரு நம்பிக்கையில் மிதந்தார். ஆனால் சாதித்தவர் 22 வயதான அமெரிக்காவின் ஜஸ்ரின் கெட்லின். 100 மீற்றர் ஓட்டத்தை முடித்த ஐந்து பேர் பத்துச் செக்கனுக்குள் ஓடி முடித்தது ஒரு சாதனை. அதிகுறைந்த வயதில் ஜஸ்ரின் கெட்லின் தங்கம் வென்றது இன்னொரு சாதனை. ஜஸ்ரின் எடுத்துக்கொண்டநேரம் 9.85 செக்கன். வெள்ளி வென்ற பிரான்சிஸ் ஒபெக்வெலு 9.86 செக்கன்கள். 2000 ஆம் ஆண்டு சிட்னியில் தங்கம் வென்ற மொறிஸ் கிறீன் வெண்கலம் வெல்ல எடுத்துக்கொண்ட நேரம் 9.87 சென்கன்கள்.



ஜஸ்ரின் கெட்வின்
புதிய தலைமுறை உதிக்கிறது

2001 இல் ஊக்க மருந்தால் சர்ச்சையில் சிக்கி இரண்டு வருட தடையை எதிர்நோக்கிய பின்னர் ஒரு வருடத்தடையை அனுபவித்தார் ஜஸ்ரின். இன்று உலகமே எனது கையில் என்கிறார் அவர். பயிற்சிகளை எவ்வளவு ஆர்வமாகச் செய்தேன். இதற்காக என்னையே இழக்கத்தயாராக இருந்தேன். இன்று என்கனவு நனவாகிவிட்டது என்பவர் என்ன இருந்தாலும் இந்தத் துறையில் மொறிஸ்கிறீன் ஒரு அற்புதமான வர்ர் என்கிறார். இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஜஸ்ரினின் வயது. வெறும் இருபத்தியிரண்டே வயதான இவர் - ஏனைய வீரர்கள் இளைஞர்கள் கையோங்கும் காலம் இது என்று கூறவைத்துவிட்டார். இவரைப் பாராட்டியவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் மைக்கல் ஜோன்சன். பி.பி.சி விளையாட்டு வர்ணனையாளராக விளங்கும் இந்த முன்னாள் ஒலிம்பிக் மன்னன் ஜஸ்ரின் பற்றி மிக உயர்வாகக் குறிப்பிட்டுள்ளார்.

முத்தாய்ப்பாக ஜஸ்ரினின் அம்மா ஜென்னட் ரொம்பரொம்ப சந்தோஷமாக இருக்கிறார். சிறு வயதில் இவன் ஒப்பீட்டில் சின்னவனாகவே இருந்தான். ரீ.வி.நிகழ்ச்சிகளில் நடைபெறும் பாய்ச்சல் நிகழ்ச்சிகளைப் பார்த்து விட்டு ரீ.விக்கு மேலேயே ஏறிக்குதிப்பான்.

சிலகாலம் தடைதாண்டல் பயிற்சிகளில் ஈடுபட்ட இவன் எவ்வாறு சாதனை ஓட்டப்பந்தயத்தைத் தெரிவு செய்தான் என்று தெரியவில்லை. ஒரு சம்பவம் நடைபெற்றது. ஒரு தடகளப் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டத்தில் ஆளில்லை என்று இவனை எடுத்தது ஞாபகம் இருக்கிறது என்கிறார். எது எப்படியோ 108 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட ஒலிம்பிக்கில் அதிவேகமாக 100 மீற்றரைத் தாண்டியவர் என்னும் சாதனையை தன்னகத்தே பெற்றுக்கொண்டார் ஜஸ்ரின் கெட்லின் .

**- ஜோசப் கிருஷ்ணா.**

# சிகரத்தைத் தொட்டவர்கள்



பிறைன் லாறா இன்னுமின்னும் அதிகமாய்...

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே இங்கிலாந்தின் ஓல்ட்ரபோர்ட் மைதானத்தில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பிறைன் லாறா 7 ஓட்டங்களை எடுத்ததன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் குவித்த நான்காவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டார்.

ஏற்கனவே இந்தச் சாதனையை இந்தியாவின் சுனில் கவாஸ்கரும், அவுஸ்ரேலியாவின் அலன் போடரும், ஸ்ரீவ்வோவும் ஏற்படுத்தியிருந்தனர்.

1986/87 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் பாகிஸ்தானுக்கு எதிராக அஹமதாபாத்தில் நடைபெற்ற சுனில் கவாஸ்கரின் 124 ஆவது போட்டியிலேயே, அவர் முதன் முறையாக 10ஆயிரம் ஓட்டங்களைப் பெற்ற வீரரானார். இயாஸ் பஹி என்ற பாகிஸ்தான் பந்து வீச்சாளரின் பந்து வீச்சிலேயே தனது 10 ஆயிரமாவது ஓட்டத்தை இவர் பெற்றார்.

இதன் மூலம் அன்றையகாலப் பகுதியில் டெஸ்ட் போட்டிகளில் அதிகமான ஓட்டங்களைப் பெற்றிருந்த இங்கிலாந்து வீரர் ஜெப்றி பொய்கொட்டின் சாதனையை முறியடித்தது மட்டுமல்லாமல், கிரிக்கெட்டில் இங்கிலாந்து செலுத்திவந்த ஆதிக்கத்தையும் தகர்த்தெறிந்தார்.

அதன் பின்னர் 1992/93 காலப்பகுதியில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக - சிட்னியில் நடைபெற்ற போட்டியிலேயே அலன்போடர் பத்தாயிரம் ஓட்டங்களைப் பெற்றார். இது அவர் விளையாடிய 136 ஆவது போட்டியாகும்.

இறுதியாக அவர் ஓய்வு பெறும்போது 156 போட்டிகளில் விளையாடி 11174 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்ற கவாஸ்கரின் சாதனையைத் தன்வசமாக்கினார் அலன் போடர்.

இந்த வரிசையில் 2002/03 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இங்கிலாந்துக்கெதிராக சிட்னியில் நடைபெற்ற ஆஷஸ் தொடரின் 5 ஆவது போட்டியில் விளையாடிய அவுஸ்ரேலிய வெற்றிக் கப்டன் ஸ்ரீவ்வோவும் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்தார்.

அத்துடன், இந்தப் போட்டியின் மூலம் ஸ்ரீவ்வோ, இன்னொரு சாதனையையும் படைத்திருந்தார். அதுதான், சேர் டொனால்ட் பிரட்மன் டெஸ்ட் போட்டிகளில் பெற்ற 29 சதங்களைச் சமப்படுத்தியமையாகும். இதனை - தான் விளையாடிய 156 ஆவது போட்டியிலேயே ஸ்ரீவ்வோ செய்திருந்தார்.



ஸ்ரீவ் வோ என்னைத்தாண்டிப் போங்கள்

ஆனால், இவர்கள் அனைவரையும் விட பிறைன் லாறாவே குறைந்த போட்டிகளில் - அதாவது 111 போட்டிகளில் மட்டுமே விளையாடி 10 ஆயிரம் ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இவர் தனது 10 ஆயிரமாவது ஓட்டத்தை பிளின்ரொப்பின் பந்து வீச்சிலேயே பெற்றுக் கொண்டதுடன், அவரின் அடுத்த பந்து வீச்சிலேயே ஸ்ரரஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதில் ஸ்ரீவ்வோவுக்கும், லாறாவுக்கும் இடையிலான தொடர்பு என்னவெனில் இவர்கள் இருவருமே, 10 ஆயிரம் ஓட்டங்களை இங்கிலாந்துக்கெதிராகப் பெற்றதுடன், அந்தப் போட்டியில் இந்த இருவரினதும் அணிகள் இங்கிலாந்திடம் தோல்வியடைந்தது தான்.

10 ஆயிரம் ஓட்டங்களை அடித்த இந்த நால்வருள்ளும், ஒரு நாட்டுக்கெதிராக அதிக சதம் அடித்த பெருமை கவாஸ்கரையே சாரும். அவர் அன்றைய மேற்கிந்திய வேகப்பந்து வீச்சுப் படைக்கெதிராக விளையாடி 13 சதங்களை அடித்திருந்தார்.

அத்துடன் இந்த நால்வருள்ளும் மிகப்பெரிய இனிங்ஸ்களை விளையாடிய பெருமை லாறாவையே சாரும். அவரின் டெஸ்ட், கிரிக்கெட் வரலாற்றில் ஒரு நாற்சதமும், ஒரு முச்சதமும், 5 இரட்டைச் சதங்களும் அடங்குகின்றன.மேலும் இந்த நால்வருள்ளும், ஒரு இனிங்ஸில் அதிக சதம் பெற்றது ஸ்ரீவ்வோதான். அவர் பெற்ற 32 சதங்களில் 30 சதங்களை முதல் இனிங்ஸிலேயே பெற்றுள்ளார். இந்த நால்வருள்ளும் அதிக அரைச்சதங்களைப் பெற்றது அலன் போடர் தான். அவர் மொத்தம் 63 அரைச்சதங்களைப் பெற்றதுடன் அதில் அதிகபட்சமாக 21 அரைச்சதங்களை இங்கிலாந்துக்கெதிராகப் பெற்றிருந்தமையும் குறிப்பிடததக்கது.

அடுத்து - இந்தப் 10 ஆயிரம் ஓட்டம் பெறும் வீரர்கள் வரிசையில் சேர விருப்பவர் இந்திய அணியின் நட்சத்திரவீரர் சச்சின் டெண்டுல்கர். அதற்கு அவருக்கு இன்னும் 530 ஓட்டங்களே தேவைப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னர் ஓய்வு பெறலாம் என எதிர்பார்க்கப்படும் லாறா, அலன் போடரின் அதிக ஓட்டங்கள் பெற்ற சாதனையை முறியடித்தாலும், அதனையும் முறியடித்து உலக சாதனை படைக்கப்போவது சச்சின் டெண்டுல்கர்தான் என்பது மறுக்க முடியாத, ஒரு தீர்க்கதரிசனமான உண்மையாகும். ஏனென்றால் லாறா ஓய்வடைந்த பிறகும், டெண்டுல்கர் ஒருசில வருடங்கள் விளையாட வாய்ப்பு உள்ளது என்பதனால்தான்.

**- விமலன்.**

# அம்மணி ஏதென்ஸின் கண்மணி



ஜியன்னா ஏஞ்சலோவா கொக்கா

ஒலிம்பிக் போட்டிகளை நடாத்த அனுமதி பெறுவது என்பது ஒரு பகீரதப் பிரயத்தனம்தான். 1997 ஆம் ஆண்டு ரோம் நகரை விஞ்சி, ஏதென்ஸ் 2004 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் நகரமாகத் தெரிவு செய்யப்பட்டபோது கிரேக்கம் அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. ஆனால், இந்த ஏழுவருட அவகாசத்தில் ஏற்பாடுகளைச் செய்துமுடிக்க இயலுமா என்ற அச்சமும் உடனே கிரேக்கத்துக்கு ஏற்பட்டிருக்கும். மூன்றாண்டுகாலமாக அந்த அச்சமே, யதார்த்தமாகவும் மாறி இருந்தது. திட்டமிட்டமைக்கு மாறாக எல்லாமே பின்னடைவு. நிர்மாணத்துறை, அசமந்தம், தொழிலாளர் அமைதியின்மை, நிதிவளப் பிரச்சினை, பணவீக்கப் பிரச்சினை, இத்தியாதி, இத்தியாதி. குறிப்பாக ஏறத்தாழ 5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியில், திட்டமிட அது எட்டு மில்லியன் அமெரிக்க டொலர்களாக விஸ்வரூபம் எடுத்துவிட்டது.

இந்தப் பிரச்சினைகளில் அரச மட்டத்தில் கசமுசா - அதிருப்தி - எரிச்சல். இப்படி இன்னொரு வரிசை. எந்தப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது. IOC ஒலிம்பிக் போட்டிகளை பாரிஸ் நகரத்துக்கு மாற்றும் எண்ணத்தையும் கிரேக்கத்துக்கு வெளிப்படுத்தி விட்டார்கள்.

இந்த நிலையில்தான் கிரேக்கத்துக்கு ஒரு துருவ நட்சத்திரம் தெரிந்தது. மீள் புனரமைப்புச் செய்யப்பட்ட ஏதென்ஸ் ஒலிம்பிக் குழுவின் தலைமைப் பொறுப்பு ஒரு சிறந்த அரசியல்வாதியும், நாடாளுமன்ற அங்கத்தவராக இருப்பவரும் கிரேக்கத்தின் பிரபல்யமான சட்டத்தரணியும், ஏதென்ஸ் நகரத்தின் எல்லோராலும் அறியப்பட்டவருமான கியானா ஆஞ்சலோபவுலஸ் டஸாகலாகி அம்மையாரின் தலையில் இந்தப் பாரிய சுமை இறக்கப்பட்டது. அம்மையார் அதிரடியாகவே தனது கடமையை ஆரம்பித்தார். அடிக்கட்டுமான வேலைகளில் புத்தூக்கம் 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டிக்குப் பார்வையாளர்களாகச் சென்றிருந்த 130 பேரின் அதி உச்சப் பயனைப் பெறல், வேகமாக மைதானங்களை அமைத்தல், மீள் நிர்மாணம் செய்தல் என்றவாறு, இந்த அம்மையார் கண் உறங்காமலே காரியத்தில் இறங்கினார். இறுதியில் அதன் பயனை உலகின் ஏறத்தாழ 300 கோடிமக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவுஸ்ரேலிய ஒலிம்பிக் அதிகாரிகள் அப்படியே பிரமித்துப்போய் சிட்னியைவிட அற்புதமாக ஏற்பாடுகளைச் செய்துள்ளார்களே என்று வியந்துபோய் நிற்கின்றனர். இந்த அம்மணியின் திறமையின் வீச்சை எதைக்கொண்டு அளவிடுவது? அதெல்லாம் முடியாத காரியம். அம்மணி பெண் குலத்துக்கே ஒரு பெரும் கௌரவத்தைக் கொடுத்துள்ளார் என்று தயங்காமல் சொல்லலாம். அம்மணி ஒரு பெண் கில்லி.

**- நிர்மலன்.**


## ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

*01. ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸ் ஆடவர் பிரிவில் 100 மீற்றர் தங்கம் வென்றவர் யார்?*
*02. ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸ் மகளிர் ஒற்றையர் ரெனிஸ் சம்பியன் யார்?*
*03. மிக அண்மையில் டெஸ்ட் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தவர் யார்?*

**விளையாட்டுப் புதிர் 19**

விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர்:.......................................

முகவரி:.......................................

01.

02.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ்விண்ணப்பப்படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு 07.09.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

விளையாட்டுப் புதிர்-இல.19
நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**விளையாட்டுப்புதிர் - 18**
**வெற்றியாளர்**

*தர்மலிங்கம் கஜன்ராஜ்*
*நீதிமன்ற வீதி, மல்லாகம்.*

அனுசரணை:
ஜொனெக்ஸ் மல்ரி பலஸ் விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
**YONEX MULTI PALACE**
*76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*


# நீங்க தானா அந்த தங்க மங்கை



தங்கப்பதக்கத்தின் மேலே

ஒலிம்பிக் போட்டிகளில் பல அதிர்ச்சி நிறைந்த முடிவுகள் பெறப்பட்ட போதும், பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத் தில், அதாவது உலகின் வேகமான பெண்ணாகப் பரிணமிப் பவர் யார்? என்பதில் எதிர்பா ராத முடிவு ஏற்பட்டது. கடந்த நான்கு வருடங்களாக இந்த நிகழ்வுடன் கூடுதலாகத் தொடர்பு படுத்தப்பட்ட பெயர் அமெரிக்காவின் மரியன் ஜோன்ஸ். ஆனால், அவர் அமெரிக்கக் குழுவில் இணையும் தகுதியை அமெரிக்காவிலேயே இழந்துவிட்டார். லொறின் வில்லியம்ஸ் 100 மீற்றர் ஆரம்பச் சுற்றுகளில் மிகத் திறமையான பெறுபேறுகளைப் பெற்றிருந்தார். இதேவேளை தங்கம் வெல்வதற்கு வாய்ப்பு உள்ளவர்கள் என்று கருதப்பட்ட அமெரிக்க வீராங் கனைகளாக கெலிவைற் மற்றும் ரோரி எட்வட்ஸ் இருவரும் ஊக்க மருந்துப் பாவனைத் தொடர்பாக தடைக்கு உள்ளாகி இருப்பவர்கள். இரு தடவை ஒலிம்பிக் பதக்கம் வென்ற கெய்ல் டெவர்ஸ் அரை இறுதிப் போட்டிகளிலேயே தோல்வியுற்று அரங்கை விட்டு வெளியேறினார். இதே வேளை பிரான்சின் நம்பிக்கை நட்சத்திரம் முன்னாள் ஐரோப்பியச் சம்பியன் கிறிஸ்ரீன் ஆரோனும் அரை இறுதிப் போட்டியுடன் கெய்ல்டேவர்சுடன் கைகோர்த்துக் கொண்டார்.

அப்படியானால், இந்த மாபெரும் ஒலிம்பிக் போட்டிகளின் வேகமான பெண்மணிதான் யார்? பெலாரஸ் அல்லது பைலோரஷ்யா என்றழைக்கப்படும் முன்னாள் யு.எஸ்.எஸ்.ஆரின் ஒரு அங்கமான தற்போது தனிநாடாகத் திகழும் நாட்டைச்சேர்ந்த யூலியா நெஸ்ரரென்கோ எனும் பெண்மணியே 10.93 என்ற செக்கன்களில் 100 மீற்றர் ஓட்டத்தை நிறைவு செய்து உலகின் அதிவேகப் பெண்மணி என்ற பெருமையைத் தட்டிச் சென்றிருக்கிறார். அமெரிக்க வீராங்கனை லொறின் வில்லியம்ஸால் 10.96 செக்கன்களிலேயே 100 மீற்றரைக் கடக்கமுடிந்தது. வெள்ளிப் பதக்கம் பெறமுடிந்தது. அதேவேளை ஜமெய்க்கா நாட்டின் வெரோனிக்கா கம்பெல் என்பவரே வெண்கலத்தை வென்றார்.

**-மரியா.**

# முல்லை மருத்துவமனை புனரமைப்புக்கு அறுநூற்றைம்பது மில்லியன் ரூபா தேவை

## அரசாங்க அதிபர் இமெல்டா தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையைப் புனரமைப்பதற்கு 650 மில்லியன் ரூபா நிதி தேவையென முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

முல்லை மாவட்ட நகர அபி விருத்தி தொடர்பாக கருத்து தெரி விக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்தகால போர் நடவடிக்கை யால் சிதைவடைந்துபோன முல்லை நகரைக் கட்டியெழுப்ப அனைவரும் பாடுபட்டு வருகின்றோம்.

அபிவிருத்திப் பணிகளுக்கு கிடைககின்ற நிதிகளைப் பயன் படுத்தி, புனரமைப்புக்களை முன் னெடுத்தாலும் தற்போது நடைபெறும் வேலைகள் உரிய காலத்தில் பூர்த்தி அடையாமல் உள்ளன. நிதிப்பற்றாக் குறை, தொழிலாளர் பற்றாக்குறை போன்றவற்றால் முல்லை நகரை அபி விருத்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



வன்னிப் பதிவுகள்

# 2004 - செப்ரெம்பர் மாதம் முதல் புதிய பிரதேச செயலர் நியமனம்

வன்னியில் பல பிரதேச செயல கங்களுக்கு செப்ரெம்பர் முதல் புதிய பிரதேச செயலர்கள் நியமிக் கப்பட உள்ளதாகத் தெரியவருகி றது.

இதுவரைகாலமும் பதில் பிர தேச செயலாளராகக் கடமையாற்றி வந்த கரைச்சி, கண்டாவளை, பூந கரி, பளை ஆகிய பிரதேச செய லகங்கள் உட்பட - துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு அரச நிர் வாக சேவையில் சித்தியெய்திய வர்கள் புதிதாகப் பிரதேச செயலர்க ளாக நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை கரைச்சி பிரதேச செயலராகக் கடமையாற்றும் பொன். நித்தியானந்தன் கிளிநொச்சி கச் சேரியில் திட்டப்பணிப்பாளராக இவர் முன்பு வகித்த பதவிக்கு செல்ல வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின் றது.

பதில் கடமையாற்றிவந்த பிர தேச செயலர்கள் - மாவட்ட செயல கங்களுக்கு பொருத்தமான பதவி யில் அமர்த்தப்படவுள்ளனர்.

## குளிக்கச் சென்றவரை முதலை கடித்தது

வட்டக்கச்சி பத்து வீட்டுத் திட்டத் திலுள்ள கறுப்பிக் குளத்தில் குளிக் கச் சென்றவர் - முதலையால் கடி யுண்டு காயமடைந்தார்.

கடந்த புதன்கிழமையன்று இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த சண்முகம் (வயது 57) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் குளத்தில் குளித்துக் கொண்டிருக்கையில், கையில் முதலை கடித்து இவரை ஆழத்துக்கு இழுத் துச் சென்றதாகவும், தானும் விடாது அதனுடன் போராடி மேலே வந்து தப்பிவந்ததாக சம்பவத்தில் காய மடைந்தவர் தெரிவித்தார். (9)

## அடிக்கல் நாட்டு வைபவம்

பொருண்மிய மதியுரையகம் உப்பு உற்பத்தி மேம்பாட்டுக்காக ஜி.ரி. இசற் அரச சார்பற்ற நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்த அடிப் படையில், கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஆனை யிறவு உப்பு உற்பத்திப் பேட்டை யில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை கிளிநொச்சி அரசாங்க அதிபர் இராசநாயகமும், ஜீ.ரி.இசற் பிரதிநிதி ஜெயக்குமாரும் ஏற்றி வைத தனர். தேசியக் கொடியை குணா வும் ஏற்றிவைத்தார். (9)

# வவுனியா பல்கலைக்கழகம் மீளவும் ஆரம்பிக்கவுள்ளது

(வவுனியா)

கடந்த ஜுன் மாதத்தில் ஏற்பட்ட சில குழப்பங்களால், யூலை 22 இலிருந்து மூடப்பட்டிருந்த வவு னியா பல்கலைக்கழகத்தில் செப் ரெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து வகுப் புக்கள் வழமைபோல் ஆரம்பிக்க வுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின் றன.

பலகலைக்கழகத்துக்கென ஒதுக் கப்பட்ட பம்பைமடு காணியில், பல் கலைக்கழக கட்டடங்களைக் கட்டுமாறுகோரி, வளாக முன்றலில் மறியற்போராட்டம் செய்த மாண வர்கள், கல்விசாரா உத்தியோகதத்ர் கள் சிலரை கட்டடத்துக்குள் பூட்டி வைத்து ஆர்ப்பாட்டம் செய்ததனால், எழுந்த குழப்பங்களால் இந்தப் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்தது.

வவுனியாவில் சரியான கட்ட டங்கள் இல்லாமையால் மாணவர் கள் பலவித சிரமங்களையும் அனு பவித்து வருவதை அரசாங்க உத்தி யோகத்தர்களும், நிர்வாகமும் கண்டு கொள்ளாமையினாலேயே மாணவர் கள் இந்தப் போராட்டத்தை முன் னெடுத்திருந்தார்கள்.

சென்ற வாரத்திலிருந்து பம்பை மடு காணியில் ஒரு விளையாட்டு மைதானம், மாணவர் தங்குமிடம் சில வகுப்பறைகள் போன்றவற்றைக் கட்டியெழுப்பும் திட்டம் ஆரம்பிக் கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து, செப் ரெம்பரில் வகுப்புக்களை மீளவும் ஆரம்பிக்க முடிவெடுக்கப்பட்டுள்ள தாகவும் தெரியவருகிறது. (03)

## மருந்தாளர் இன்றி இயங்கும் முள்ளியவளை மருந்தகம்

(முள்ளியவளை)

முள்ளியவளையிலுள்ள மருத்து வமனை கடந்த பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மருந்தாளர் இல் லாமல் இயங்கி வருகின்றது.

இந்த மருத்துவமனையில் பணி புரியும் மருத்துவரே - மருந்தாளருக் கான பணியையும் மேற்கொள்வதால், அவர் நோயாளர்களைப் பார்வையி டுவதில் சிக்கல்களை எதிர்நோக்கி யுள்ளார்.

எனவே, இந்த மருத்துவமனைக்கு மருந்தாளர் ஒருவரை விரைவில் நிய மிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டு மெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

# குளங்கள் உள்ள காணிகளில் வீடுகள் அமைத்தோருக்கு எதிராக நடவடிக்கை

## கமநல ஆணையாளர் தெரிவிப்பு

வவுனியா மாவட்டத்தில் குளங் கள் உள்ள பகுதிகளை ஆக்கிரமித்து, வீடுகள் கட்டுவோர் மீது உடனடி யாக நடவடிக்கை எடுக்கப்படும் என, கமநல அபிவிருத்தி உதவி 'ஆணை யாளர் கே.தெய்வேந்திரன் தெரி வித்தார்.

பண்டாரிக்குளம், தச்சநாதன் குளம், கோயிற்குளம், வைரவ புளி யங்குளம், கோயிற் புதுக்குளம், பட்டகாடு பட்டாணிச்சி புளியங்குளம், கனகராயன்குளம், வேப்பங்குளம், வெளிக்குளம், பத்தினியார் மகிழம் குளம், தம்பளை புளியங்குளம், தாண்டிக்குளம், நெடுக்குளம், வவு னியாக்குளம் ஆகிய குளக்காணி களை ஆக்கிரமித்து, 300 இற்கும் அதிகமானோர் வீடுகளைக் கட்டி வசித்து வருகிறார்கள்.

மேலும் இந்தக் குளங்களை ஆக்கிரமித்து, வீடுகளைக் கட்டி வசித்து வருவோர் - தாமாக எழும் பிச் சென்றால், அவர்களுக்கு எந்த் வித பாதிப்பும் ஏற்படாது.

குளக்காணிகளை ஆக்கிரமித்து வீடுகளைக் கட்டி, வேலிகளை அமைத்து இருப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுத்து, அகற்றும்போது அதற்கான செலவை அவர்கள் வழங்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (3)

## ஒட்டுசுட்டான் பிரதேசத்தில்

# மிதிவெடிகள் அகற்றப்படாமையால் அபிவிருத்திப் பணிகளில் சிக்கல்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பகுதியில் இன்ன மும் மிதிவெடிகள் அகற்றப்படாத காரணத்தினால், அங்கு அபிவிருததிப் பணிகளை துரிதகதியில் மேற்கொள் வதில் சிக்கல் தோன்றியுள்ளது.

இவ்வாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் திருமதி செல்வராசா தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததா வது -

ஒட்டுசுட்டான் உட்பட அதனை அண்மித்த பிரதேசங்களில் பெரு மளவு வெடிபொருட்கள் அகற்றப்படா மல் உள்ளன.

எனவே, இவற்றை அகற்றும்வரை இந்தப் பகுதிகளுக்கான அபிவிருத் திப் பணிகளை முன்னெடுப்பதில் சாத்தியமில்லை எனவும் அவர் தெரி வித்தார்.

# சுழிபுரம் பாணாவெட்டி பிரதேசத்தில் வெடிபொருள் அகற்றும்பணி ஆரம்பம்

(சுழிபுரம்)

வலி.மேற்கு பிரதேச சபைக்குட் பட்ட சுழிபுரம் - பாணாவெட்டியில் மிதிவெடியகற்றல் நடவடிக்கை ஆரம் பிக்கப்படவுள்ளது.

அண்மையில் சுழிபுரம் பாணா வெட்டிப் பகுதியில், மணிராஜ் புஸ்ப வதி - தனது வீட்டு வளவைத் துப்பரவு செய்து கொண்டிருக்கும் போது, அந்த வளவினுள் புதைத்து கிடந்த மிதிவெடி வெடித்துள் ளது.

இதில் சேதமொன்றும் ஏற்பட வில்லை. இந்தப் பிரதேசத்திலுள்ள இராணுவ காவலரணுக்கருகிலேயே இந்த நபரது வீடு அமைந்துள்ளது.

இது தொடர்பாக யாழ். செய லகத்துக்கு தெரிவிக்கப்பட்டு, தற் போது அந்தப் பிரதேசத்தில் வெடி பொருடகள் அகற்றல் தொடர்பான ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட் டுள்ளதாகவும், தொடர்ந்து வெடிபொருட் கள் அகற்றும் நடவடிக்கை விரை வில் இடம்பெறும் என யாழ். மாவட்ட மிதிவெடி அகற்றல் திணைக்களத்தி னர் தெரிவித்தனர்.

## தேசிய அடையாள அட்டை கண்டெடுப்பு

வெளிச்சவீட்டு ஒழுங்கை, பருத் தித்துறை எனும் முகவரியை உடைய அரியதாஸ் அருள்தாஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு, நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

# உப்பள அணைக்கட்டு விசமிகளால் சேதம்

கல்லுண்டாய் உப்பளத்தின் அணைக்கட்டுமண் சேதமாக்கப்பட்டு, சிப்பிகள் எடுக்கும் நடவடிக்கை அண்மைக்காலமாக சில விஷமிக ளால் மேற்கொள்ளப்பட்டு வருவ தாக இந்தப் பகுதி மக்கள் தெரி வித்தனர்.

இதனால் அணைக்கட்டின் ஒரு பகுதி பலத்த சேதமடைந்துள்ளது.

இந்த நடவடிக்கை தொடருமா னால், மழைக்காலத்தில் வெள்ள அபாயத்தை இந்தப் பகுதி மக்கள் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற் படக்கூடும் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனைத் தடுத்து நிறுத்த சம் பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும் என இந்தப் பகுதியை அண்மித்த மக்கள் கோரி யுள்ளனர். (48)



அண்மையில் மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாசா லையில் இடம்பெற்ற கண்காட்சியின்போது இடம்பெற்ற அங்கதன் தூது காட்சியில் மாணவர்கள் பற்கேற்றிருப்பதைப் படத்தில் காணலாம். (24)

# பழுதடைந்த நிலையில் பருத்தித்துறை வீதி

பருத்தித்துறை வீதியுடன் ஞான பாஸ்கரோதயா வீதியை இணைகும் முச்சந்திக்கு அருகிலுள்ள பாலம்- மிகவும் மோசமான நிலையில் சேத மடைந்துள்ளமையால், அந்தப் பகுதி யூடாக பயணிப்போர் பலத்த சிரமங் களை எதிர்நோக்கி வருகின்ற னர்.

இந்தப் பாலம் இருமுறை செப் பனிடப்பட்டும் சிறந்த முறையில் சீர செய்யப்படவில்லை என்று தெரி விக்கப்படுகிறது.

இதனால், இரவில் பிரயாணம் செய்வோர் - விபத்துக்குள்ளாக வேண்டிய நிலை காணப்படுகின்றது. எதிர்வரும் மழைகாலத்துக்கு முன் னர், இந்தப் பாலம் சிறந்த முறை யில் சீர்செய்யப்படவேண்டும் என்றும், இது குறித்து சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (90)

## முழுநிலா கருத்தரங்கு

அகவொளி குடும்பவள நிலை யம் நடத்தும் மாதாந்த முழுநிலாக் கருத்தரங்கு இன்று மாலை 3.30 மணிக்கு அகவொளி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 'சிறுவர்களின் உரிமைக ளும், உடமைகளும்' எனும் பொரு ளில் யுனிசெப் உதவி சிறுவர் பாது காப்பு அதிகாரி வாசுகி ஜெயசங்கர் கருத்துரை வழங்கவுள்ளார்.

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில், ஒப்பந்த அடிப் படையில் கடமையாற்ற - பகுதிநேர ஆசிரியர்களுக்கான விண்ணப்பங் கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கிலம், ஏ அல்லது டி சித்தியுடன் இரு அமர் வுக்கு மேற்படாமல், க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருப் பதுடன், க.பொ.த. (உ/த) பரீட்சை யில் ஒரே அமர்வில் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 06.09.2004 திகதிக்கு முன் தமது விபரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## சமகால அரசியல் கருத்தரங்கு

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரால் நடாத்தப்படும் சமகால அரசியற் கருத்தரங்கின் 18 ஆவது தொடர் - எதிர்வரும் 1 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில், 'தொடரும் திட்ட மிட்ட தமிழ் இனத்துவ அழிப்புக்கள்' எனும் தலைப்பில் - வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்லூரி விரிவுரை யாளர் அ.குமாரவேலால் கருத்துரை வழங்கப்படவுள்ளது.

## சமய அறிவுப் பரீட்சை

தென்மராட்சி கல்வி கலயத் துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான சமய அறிவுப் போட் டிப் பரீட்சை செப்ரெம்பர் 11 ஆம் திகதி காலை 9 மணிக்கு சாவகச் சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் என்பவற்றில் இடம்பெறவிருப்பதால், அனைத்து மாணவர்களையும் இதில் பங்குபற்றுமாறு சகல பாடசாலைக ளுக்கும் தென்மராட்சிக் கல்வி வலய பணிப்பாளர் வ.செல்வராசா அறி வித்துள்ளார்.

# மாதர் சங்கத்தின் ஆண்டுவிழா

நல்லூர் சங்கிலியன் மாதர் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று நடைபெறவுள்ளது. நல்லூர் சங்கிலியன் மன்ற திறந்தவெளியரங்கில் இன்று இரவு 7 மணியளவில், மன்றத் தலைவி மனோகரி சிவராமன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கலந்துகொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில் இந்த ஆண்டு சங்கிலியன் மாதர் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவமும், சிறப்புரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம் இனநலம்*
*எல்லாப் புகழும் தரும்.*

திருக்குறள்

## நமது நோக்கு

### தமிழினத்துக்கும் சமாதானத்திற்கும் எதிரான பிரசார யுத்தம்

தமிழ் தேசத்திற்கும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் அதனைத் தலைமை தாங்கி நடத்துகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எதிராக தென்பகுதி சிங்கள மற்றும் ஆங்கில பெரும்பான்மை ஊடகங்கள் அனைத்தும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு பிரசார யுத்தத்தை மிக நுட்பமாகத் திட்டமிட்டமுறையில் தீவிரமாக மேற்கொள்ள ஆரம்பித்துள்ளதை மிகத் தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த பிரசார யுத்தத்தின் பிரதான இலக்கு சமாதானத்தை தகர்ப்பதையே குறியாகக் கொண்டதாகும். அதாவது சமாதான முயற்சிகள் எந்த வடிவத்தில் மேற்கொள்ளப்பட்டாலும், அது தமிழ் மக்களுக்கு எந்தவிதமான அரசியல் உரிமைகளையும் வழங்கிவிடக்கூடாது என்பதிலேயே சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனை கொண்ட அரசியல் தலைமைகள் யாவும் காலங்காலமாக கவனமாக இருந்து வந்துள்ளனர்.

இந்த அரசியல் நிலைமைகளின் சிங்கள இனவாத கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழ் மக்களுக்கு எதிராக சமூகவியல் மற்றும் அரசியல் ரீதியான கருத்துக்களைப் பரப்புவதில் தென்பகுதி ஊடகங்கள் வகித்துவரும் பங்கானது கடந்த நான்கு தசாப்தங்களாக பெரு வளர்ச்சி கண்டுள்ளது என்றால் அது மிகையில்லை.

- சிங்களம் தான் தேசியமொழி - இது பௌத்த தேசம் என்ற இரு கொள்கைகளை வலியுறுத்தி உருவாக்கப்பட்ட பேரினவாத சிந்தனைகள் தமிழ் மக்களுக்கு இந்த மண்ணில் எத்த உரிமையும் கிடையாதென்றும் அவர்கள் வந்தேறு குடிகளென்றும் சிங்களப் பாமர மக்களிடையே பரப்பிய விஷத்தன்மையான, விசமத்தனமானதுமான கற்பிதமானது முழுத் தமிழினத்திற்கும் எதிரான ஒரு வெறியை ஏற்படுத்தியபோது அதனை சிறுபொறி நிலையிலிருந்து பெருந்தீயாக மூளச்செய்த பங்கு தென் பகுதி ஊடகங்களுக்கே உரியது.

இந்த பெருந்தீயே கடந்த இரு தசாப்தத்திற்கும் அதிகமான போர்த்தீயின் மூலாதாரமாகும். இப்போர்த் தீ தமிழினத்தை அழிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டு இப்போது இந்த நாட்டையே கபளீகரம் செய்யும் நிலைக்கு வந்த பின்னரும்கூட, பேரினவாத சிந்தனையாளர்கள் தேசநலன் குறித்து சிந்திப்பதாக இல்லை. இது இன்றைய அவலங்களுக்கெல்லாம் காரணமுமாம்.

வீடு கொளுத்துற ராசாவுக்கு என்னை எடுத்து ஊத்துற மந்திரி போன்று நாட்டையே கொழுத்த முயலும் சிங்கள ஆட்சித் தலைமைகளுக்கு கலையேத்திற பொறுப்பை தென்பகுதி ஊடகங்களே ஏற்றுவருகின்றன. இனவாதத்தை சிங்கள அரசியல்வாதிகள் எந்த அளவுக்கு தமது அரசியல் சுயலாபங்களுக்காக பயன்படுத்திக் கொண்டார்களோ அதனைவிடவும் பல மடங்கு அதிகமான தென்பகுதி மக்களுக்கு - தமிழருக்கு எதிரான வெறியுணர்வை ஊட்டுவதில் அங்கிருந்து வெளியாகும் சிங்கள ஆங்கில ஊடகங்கள் ஆற்றிய பங்கு, அவற்றின் விற்பனையை மட்டும் இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதல்ல. அதனைவிடவும் தமிழ் மக்களின் எதிர்காலத்தையே சூனியமாக்கும் நோக்குடனும் மேற்கொள்ளப்பட்டதாகும்.

இன்று போருக்கு சமாதானம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் சூழலிலும் அதற்கு எதிராகவும், அதனைச் சிதைப்பதிலும் தென்பகுதி அரசியல் தலைமைகளும் தென்பகுதி ஊடகங்களுமே தலைமை தாங்குகின்றன எனலாம்.

இன்று சமாதானம் என்பது மயிரிழையில் ஊசலாடிக் கொண்டிருக்கும் வேளையிலும் கூட தென்பகுதி ஊடகங்களின் அதற்கெதிரான பிரசார யுத்தம் குறைவதாக இல்லை.

விடுதலைப் புலிகளுக்கும், சமாதான அனுசரணையாளர்களான நோர்வே அரசுக்கும் சமாதானத்தை வலியுறுத்தி நிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் எதிராக இந்த ஊடகங்கள் நடத்தி வரும் பிரசாரப் போரின் தாக்கமே இந்த நாட்டின் எதிர்கால அமைதியை அதலபாதாளத்துக்குள் தள்ளப்போகிறது என்பது மட்டும் உண்மை.

இந்த பணியில் தென்பகுதி ஊடகங்கள் ஒன்றுபட்டும், ஒருவரையொருவர் விஞ்சும் வகையிலும் இயங்கி வருவதை நாம் அவதானிக்க வேண்டிய கட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த ஆபத்தான நிலையிலும் எமது தமிழ் ஊடகங்கள் சில தேசியம் பற்றியும், விட்டுக்கொடுத்தல் பற்றியும் அனுசரித்துப்போதல் குறித்தும் எழுதி வருவதுதான் துயரமான விடயமாகும்.

தமிழினம் மிகவும் நெருக்கடி மிகுந்ததும், முக்கியமானதும், விவேகமாகச் செயற்பட வேண்டியுமுள்ள ஒரு கால கட்டத்தில் அவர்களை விழிப்புணர்வு கொள்ள வைக்க வேணடிய பணியை பொறுப்பேற்க வேண்டியவை தமிழ் ஊடகங்களேயாகும்.

சிங்கள ஊடகங்களின் விஷமத்தனமான பிரசாரங்களை முறியடிக்க ஒன்று திரண்டு செயற்படவேண்டிய தமிழ் ஊடகங்கள், தமிழ்மக்களின் ஒருமைப்பாட்டை தமிழ் தேசியத்தை வலியுறுத்தி குரல்கொடுக்கவேண்டிய தமிழ் ஊடகங்கள் வர்த்தக நோக்குடன் மலிவான மட்டமான ரசனையை வளர்க்கும் சாதனங்களாக செயற்படுவது வேதனைக்குரியதாகும்.

இந்த நிலையைத் தொடரவிடுதல் ஆபத்தானது. இந்த ஊடகங்களால் நமது மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும் பெரும் ஆபத்து என்பதை எமது மக்கள் உணர வேண்டும்

அதுமட்டுமல்ல தமிழ் ஊடகங்கள் தமிழரின் ஒருமைப்பாட்டுக்காக தமிழ் தேசியத்திற்காக ஒன்றுபட்டு குரல் கொடுக்கத் தவறின் வரலாறு அவர்களை மன்னிக்கவும் மாட்டாது என்பதையும் உணர வேண்டும்.

## நாடும் நடப்பும்



# இலங்கையின் இனமுரண்பாட்டுச் சிக்கல் அமெரிக்காவில் சர்வதேச மாநாடு

### இந்திய ஜனதா கட்சி தலைவர் ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நிகழும் இனமுரண்பாட்டு சிக்கலுக்குத் தீர்வினைக் கண்டறியும் நோக்கில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அமெரிக்காவின் பொஸ்ரன் நகரில் சர்வதேச மாநாடொன்றை நடத்துவதற்கு இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த மாநாட்டுக்கு இலங்கையின் சிங்கள, தமிழ், முஸ்லிம் அமைச்சர்களும், கல்விமானகளும் அழைக்கப்படவுள்ளனர்.

ஆனால், புலிகள் அமைப்பினரோ அல்லது அவர்களுக்கு ஆதரவாக செயற்படும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களோ அழைக்கப்படமாட்டார்கள் எனவும் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இதன்போது இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியாவின் தலையீடு எப்படி அமைய வேண்டும் எனவும் ஆராயப்படும்.

இந்த சர்வதேச மாநாட்டுக்கு அமெரிக்கா, சீனா, இஸ்ரேல் மற்றும் சார்க் நாடுகளின் உதவிகளையும் பொறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சமாதானத்தின் எதிரி நோர்வே அரசாங்மாம்

### ஒமல்பே சோபித தேரர் குற்றச்சாட்டு

(யாழ்பாணம்)

இலங்கையின் சமாதான செயற்பாடுகளுக்கு முக்கிய எதிரி நோர்வேயென ஜாதிக ஹெலஉறுமயவின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஒமல்பே சோபிததேரர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ உளவுப் பிரிவினரை அழிப்பதுடன் போர் நிறுத்த உடன்பாட்டையும்மீறி, செயற்பாட்டையும் முறித்துக்கொண்டு செல்லுகின்றனர். இவர்களுக்கு வெண சுண்ணாம்பு பூசுவதற்கு நோர்வே பிரதிநிதிகள் நடவடிக்கை மேற்கொள்வதை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த வேண்டும்.

நோர்வே பிரதிநிதிகள் செய்யும் தேசிய அழிவு குறித்து அனைத்துப் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## பாதீனியங்களை கட்டுப்படுத்த கிருமிநாசினிகள் வழங்கல்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேசங்களில் பரவிவரும் விசப் பாதீனியங்களின் உற்பத்தியைத் தடுப்பதற்கு, களை நாசினிகள் வழங்கப்படவுள்ளதாக கீரிமலை கமநலச் சேவை விவசாயப் போதனாசிரியர் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக மிக வேகமாகப் பரவிவரும் இந்தப் பாதீனியங்களால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு களை நாசினிகளை இலவசமாக வழங்கவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் விவசாயப் போதனாசிரியர் மேலும் தெரிவித்ததாவது - பாதீனியங்களை அழிப்பதற்கு கிராம சேவையாளர் ரீதியாக ஒன்றித்து செயற்படுவதுடன் இவற்றைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு விவசாயப் போதனாசிரியர் தெரிவித்தார். (91)

## க.பொ.த உயர்தர பெறுபேறுகள்; வடமராட்சி கல்விச் சமூகம் கவலை!

(ஆழியவளை)

அண்மையில் வெளிவந்த க.பொ.தஉயர்தர பெறுபேறுகளின் நிலைமை குறித்து வடமராட்சி பகுதி கல்விச் சமூகமும், பெற்றோர்களும் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தின் மூளை என வர்ணிக்கப்படும் வடமராட்சிப் பிரதேசத்தில் சில வருடங்களாக கல்வித்தரம் குன்றிவருகின்ற நிலைமை குறித்து இதனோடு தொடர்புடையவர்கள் இதனை ஆய்வுசெய்து அதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு கலாசார சீரழிவுகள் காரணமாக மாணவர்கள் சுயகற்றலில் ஈடுபடும் நேரம் குறைவடைந்து செல்வதன் காரணமாகவே கல்வித்தரம் குறைவடைந்து வருவதாக ஒரு சாரார் தெரிவிக்கின்றனர். (122)

## நகுலேஸ்வர மகா வித்தியாலயம் இவ்வருட இறுதியுடன் இடம்மாறும்

(சுதுமலை)

கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம் இந்த வருட இறுதியிலிருந்து இடம் மாறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சீரணிச் சந்தி சண்டிலிப்பாயில் கடந்த பத்து வருடங்களாக தனியார் வீட்டினுள் இயங்கி வந்த, மேற்படி பாடசாலை, இந்த வருட இறுதியில் இருந்து தொடர்ந்து வேறு இடத்தில் இயங்க வேண்டிய நிலையிலுள்ளது.

வீட்டு உரிமையாளர் பாடசாலை இயங்கிவருகின்ற வீட்டினை விற்பனை செய்துள்ளதால், பாடசாலை நிர்வாகம் பெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இக்காணியிலேயே இரு தற்காலிக கொட்டகைகளை அமைத்து செயற்பட்டு வந்த பாடசாலை, வீட்டினை சுற்றி மதில் அமைக்கப்படுவதினால் இரண்டாகப் பிரிக்கப்படவுள்ளது.

தரம்-01 முதல் க.பொ.த. (சா/த) தரம் வரை அடிப்படை வசதிகள் இன்றி இயங்கிவந்த மேற்படி பாடசாலைக்கு தற்போது இயங்குவதற்கான இடமும் இந்த வருடத்துடன் முடிவடைவதினால் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் அங்கலாய்ப்பில் உள்ளதாக சம்மந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். மேற்படி பாடசாலை உயர்பாதுகாப்பு வலயத்தில் கடந்த பதின்நான்கு வருடங்களாக அகப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

## செயலிழந்த கிறேற்வோல் பஸ்கள் திருத்தும் பணிகள் துரிதம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவில் செயல் இழந்திருந்த கிறேற் வோல் இன பஸ்களை மறுசீரமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

போர் நடவடிக்கைகளால் பாதிப்படைந்து பின்னர் குடா நாட்டில் மக்கள் மீளக் குடியமர்ந்தபின் 1996 ஆம் ஆண்டு வட பிராந்திய போக்குவரத்து சபை மீண்டும் செயற்படத் தொடங்கியது.

அவ்வேளை வட பிராந்திய போக்குவரத்து சபைக்கு புதிதாக சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கிறேற் வோல் இன பஸ் வண்டிகள் வழங்கப்பட்டிருந்தன. அந்த பஸ் வண்டிகள் யாவும் பழுதடைந்து டிப்போக்களில் முடங்கிக்கிடந்தன.

தற்போது பருத்தித்துறை டிப்போவுக்கு பெறுமதியான உதிரிப்பாகங்களும் புதிய எஞ்சின்களும் மத்திய போக்குவரத்து சபையால் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பஸ்வண்டிகள் புதிய எஞ்சின் பொருத்தப்பட்டு மறுசீரமைக்கப்படுகிறது. இன்னும் இரு வாரங்களில் மறுசீரமைக்கப்பட்ட இவ் பஸ்வண்டி பரீட்சார்த்தமாக சேவையில் ஈடுபடவுள்ளன என்று டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை பருத்தித்துறை டிப்போவினால் இதுவரை காலமும் தினமும் 24 பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபட்டிருப்பதாகவும் எனினும் இனிவரும் காலங்களில் ஏனைய பஸ் வண்டிகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 30 பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்த முயற்சி எடுத்துவருவதாக வும் அவர் மேலும் தெரிவித்தார். (14)

வர்த்தகக் கண்காட்சி... - பூ.நகுலன்

# தரமான பொருட்களை கொள்வனவு செய்ய வழிப்படுத்தும் வர்த்தகக் கண்காட்சி






உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல், தெற்கு வர்த்தகர்களின் தொழில் நுட்பத்தை யாழ். வர்த்தகர்களுக்கு அறிமுகப்படுத்தல், புதிய உற்பத்திகள் அறிமுகம் செய்தல், தெற்குப் பகுதிகளுக்கு பொருட்களை எவ்வாறு சந்தைப் படுத்துவது என்பது தொடர்பாக உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு விளக்கம் கொடுத்தல்.

இவ்வாறான பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்.மத்திய கல்லூரியில் 27 ஆம் திகதியில் இருந்து மூன்று நாட்கள் தொடர்ச்





சியான கண்காட்சி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. காலை ஒன்பது மணி முதல் மாலை எட்டு மணி வரை இந்தக் கண்காட்சியைப் பார்வையிடமுடியும்.

யாழ்.வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த கண்காட்சியில் ஏராளமான மக்கள் பார்வையாளர்களாக கலந்து கொண்டவண்ணம் இருக்கின்றார்கள்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பதினைந்துக்கும் மேற்பட்ட உற்பத்தி நிறுவனங்கள் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டிருக்கின்றன. உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு கண்காட்சியில் பங்கு பற்றுவதற்கும், தமது உற்பத்திப் பொருட்களை பார்வைக்கு வைப்பதற்கும் என பல சலுகைகளும், வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

உற்பத்திப் பொருட்களுக்கான விளம்பரங்கள் ஒலிபரப்பு சேவையூடாக இலவசமாக விளம்பரமும் செய்து கொடுக்கப்பட்ட வண்ணம் உள்ளன.

உள்ளூர் உற்பத்திகளைப் பொறுத்தவரையில் தளபாட உற்பத்திகள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் உற்பத்திகள், சித்த மருத்துவப் பொருட்களின் உற்பத்திகள் அரிசி, குரக்கன் போன்ற சிறுதானியப் பொருட்களின் உற்பத்திகள் போன்றன கண்காட்சியில் இடம் பெறும் உற்பத்திப் பொருட்களாக காணப்படுகின்றன.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் வரிசையில் வன்னியில் இருந்து கொண்டு வரப்பட்டு காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள உற்பத்திப் பொருட்களையும் இங்கே குறிப்பிட வேண்டியது அவசியமானதாகும்.

சேரன் பல்பொருள் வாணிபம் அரிசி, நல்லெண்ணைய், ஐஸ்கிறீம் போன்ற பொருட்களை கண்காட்சிக்கென வைத்துள்ளது. ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் தனது உற்பத்திப் பொருட்களை காட்சிக்கு வைத்துள்ளது.

இவ்வாறாக வடக்கு கிழக்கு மாகாணத்தின் முக்கிய துறையாக விளக்கும் விவசாயத்துறையின் அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் வளர்ச்சிக்கு உகந்ததாக அவற்றைக் கண்காட்சியில் வைத்து அவற்றை அறிமுகப்படுத்தியமை மிகவும் பொருத்தமான நடவடிக்கையாக அமைந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த உற்பத்தி நிறுவனங்கள் மேலும் வளர்ச்சி பெறவேண்டும் என்ற சிந்தனையின் விளைவால் ஆரம்பிக்கப்பட்ட இந்த கண்காட்சியின் முக்கிய நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும். உள்ளூர் உற்பத்தியாளர் மனங்களில் இது தொடர்பான சிந்தனைகள் நிலைக்க வேண்டிய தேவையையும் இங்கே சுட்டிக் காட்ட வேண்டியது அவசியமானதாகும்.

பதினைந்துக்கும் மேற்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருட்களைத் தவிரவும் கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்ட நாற்பது தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களும் இந்தக் கண்காட்சியின் போது கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தெற்கு வர்த்தகர்களின் தொழில் நுட்பத்தையும் அவர்களின் சந்தைப்படுத்தல் முறைகளையும் யாழ். உற்பத்தியாளர்கள் அறிந்து கொள்ளும் நோக்கிலேயே இத்தகைய பொருட்கள் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

தெற்கு வர்த்தக நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு கொண்டு வரும்போது, மேற்கொள்ளும் சிறப்புச் சலுகைகளையும் கண்காட்சியிலே காணக் கூடியதாகவுள்ளது.

கண்காட்சிக்குச் செல்கின்றவர்களுக்கு கவர்ச்சியான போட்டிகளும் வெற்றி பெற்றவர்களுக்கு கண்ணைக் கவரும் பரிசுப் பொருட்களும் காத்திருக்கின்றன.

தெற்கில் இருந்து வருகின்ற உற்பத்திப் பொருட்களில் தரமான பொருட்களைக் கொள்வனவு செய்து கொள்வது எவ்வாறு? என்பது தொடர்பான அறிவைப் பெறுவதற்கு இந்தக் கண்காட்சி துணையாக அமைகின்றது. தரமான பொருட்களையும் தகுதியான பொருட்களையும் கொள்வனவு செய்வதற்குரிய வழிப்படுத்தலாக கண்காட்சி அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. ✡

சமயம்... - நிரோஜினி

# திருநீலகண்ட விநாயகர் ஆலயத்தின் தீர்த்தோற்சவத்தில் பாவம் தீர்ப்போம்



விக்கினங்களைத் தீர்த்தருளும் விநாயகக் கடவுளை வழிபட்டே எந்தக் கருமங்களையும் ஆற்றுவது தமிழ் மக்களது மரபாக விளங்குகின்றது.

விநாயகக் கடவுள் வழிபடுவதற்கு இலகுவானவர். அவரை எங்கும் எழுந்தருளச் செய்ய முடியும்.

சாதாரண மக்கள் விநாயகக் கடவுளை சாணத்தினை ஒரு உருண்டை செய்து அதில் அறுகம் புல்களைச் செருகி பிள்ளையார் என்று கருதி வழிபடுவர்.

விநாயகக் கடவுளை எளிமையான முறையில் எழுந்தருளச் செய்து வழிபடுவது போலவே விநாயகக் கடவுளும் அடியார்களுக்கு எளிமையான அருள் வழிமுறைகளையே உணர்த்தியுள்ளார்.

விநாயகர் மாம்பழம் பெற்ற கதை இதனையே உணர்த்தி நிற்கின்றது.

விநாயகரை வழிபடாமல் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது. அவ்வாறு செய்கின்றபோது விக்கினங்களே ஏற்படும் என்கின்றன புராணங்கள்.

சிவபெருமான் கூட அரக்கர்களை அழிக்கச் சென்றபோது, விநாயகரை வழிபடாமல் சென்றதினால் அவரின் தேர் முறிவடைந்ததாக புராணங்கள் கூறுகின்றன.

இந்த வகையில் மீசாலையில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தில் அமர்ந்து அருளாட்சி புரிகின்றார் விநாயகக் கடவுள்.

மாஞ்சோலை என்ற பெயரோடு வழங்கப்பட்டு வந்த ஊரின் பெயரே இன்று மீசாலை என்ற பெயரோடு வழங்கப்படுகின்றது. மீசாலையில் வசிக்கும் மக்களின் பக்திநெறி வாழ்க்கைக்கும் ஆன்மிக நடைமுறைகளுக்கும் எடுத்துக் காட்டாய் விளங்கும் ஆலயமாக இருப்பது அவ்வூரில் அமைந்துள்ள ஆலங்களும் ஆலயங்களில் நடைபெறுகின்ற அனுஷ்டானங்களுமாகும்.

ஈழத்திருநாட்டில் யாழ்ப்பாண நகருக்கு கிழக்கே அமைந்திருக்கும் தென்மராட்சியின் ஒரு கிராமமே மீசாலையாகும்.

மீசாலை ஆண்டவன் விரும்பி உறைவதற்குரிய இயற்கை எழில் நிறைந்திருக்கின்ற ஒரு இடமாக காணப்படுகின்றது.

இத்தகைய எழில வாய்ந்த ஒரு பிரதேசத்தில் ஏ-9 வீதிக்கு அண்மையில் அமைந்துள்ள அலலாரை வீதியில் மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது.

வெள்ளை மாவடிப் பிள்ளையாரின் தீர்த்தோற்சவம் இன்று வெகு விமர்சையாக இடம்பெறுகின்றது.

அடியார்களின் உள்ளங்களில் பீடித்திருந்த ஆணவ இருளை அகற்றி அடியார் மனங்களில் ஞான ஒளியை ஏற்றி வைக்கும் - அழித்தல் தொழிலை உணர்த்தும் தேர்த் திருவிழா நேற்று சிறப்புற இடம் பெற்று முடிந்திருக்கின்றது.

அடியார்களின் மனதில் காணப்படும் குறைகளை அழித்து தேரிலே வீதி வலம் வந்த கணபதியின் களைப்பு இன்று நடைபெறும் தீர்த்த உற்சவத்தில் தீர்த்தமாடிப் போகவுள்ளது.

வெள்ளை மாவடியான் சந்நிதியில் கூடுகின்ற அடியார்களின் மனங்கள் வெள்ளையாக மாற கணபதியான் அருள்புரிய வேண்டும் என்று ஒவ்வொரு அடியார்களும் வேண்டி நிற்கின்றார்கள்.

தொன்மையும், திருவருட் திறனும் மிக்கதான திருநீலகண்ட மாவடிப் பிள்ளையாரின் மஹோற்சவத்தில் கலந்து கொண்ட அடியவர் யாவரும் அமைதியும், அருளும் பெற்றுக் களிப்படைகின்றார்கள்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்கின்ற சிறப்புக்களைப் பெற்று விளங்குகின்ற இந்த ஆலயம் மிகவும் சிறப்புடையதாகக் காணப்படுகின்றது.

வெள்ளைமாவின் அடியில் மண்ணில் புதைந்திருந்த மூலவிக்கிரகம் திருநீலகண்டம் வழிகாட்ட முத்தனுக்கு காட்சி கொடுத்து எழுந்தருளியது.

இதன் காரணமாகவே இங்கு உறையும் தலமூர்த்தி திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் என்றும் திருநாமத்தைப் பெற்றார் என்பது ஐதிகம்.

மூன்று வேளைப் பூசையும் நேரந் தவறாது தினமும் நடைபெறுகின்ற ஆலயமாக இந்த ஆலயம் விளங்குகின்றது.

இந்த ஆலயத்தில் இராஜகோபுரம் இல்லாமல் இருந்தமை இது வரை காலமும் ஒரு குறையாக அமைந்திருந்தது. தற்போது அந்தக் குறையும் தீர்வடையும் நிலையில் இராஜகோபுரம் அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்று தீர்த்தமாடுகின்ற கணபதியின் அருள், தமிழர்களின் வாழ்வில் என்றும் அமைதியையும், சமாதானத்தையும் நிலை நிறுத்த வேண்டுமென்பதே அனைவரதும் அவாவாகவுள்ளது.

வியாசர் மகாபாரதக் கதையைக் கூற அதனை தனது கொம்பு ஒன்றினை முறித்து எழுதினார் என சமய வரலாறுகள் கூறுகின்றன.

ஈழத்தமிழர்கள் வரலாறு படைக்கின்ற இந்தத் தருணத்தில், அவர்களின் எண்ணங்களுக்கும், துணை நின்று அவற்றை நிறைவேற்றி அருளுவான் விநாயகன் என்ற வகையில் இன்று திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் சந்நிதியில் அடியார்களின் வேண்டுதல்கள் அமைகின்றன. ❄

## பிரிட்டனின் முன்னாள் பிரதமர்

# மார்க்கிரட் தட்சரின் மகன் தென்னாபிரிக்காவில் கைது!

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் மார்க்கிரட் தட்சரின் மகன் மார்க்தட்ச்சர் தென்னாபிரிக்க அரசின் வீட்டுக்காவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இக்குவாரியோறியல் •குனியே நாட்டில் இடம்பெற்ற சதிப்புரட்சிக்கு மார்க் தட்சர் நிதி உதவி வழங்கியதாகத் தெரிவித்தே தென்னாபிரிக்கப் பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை கேப் நகரத்தில் உள்ள கொன்ஸ்ராவிற்றாப் பகுதியில் உள்ள இவரது வீட்டில் வைத்தே தட்சர் கைது செய்யப்பட்டார்.

51 வயதான மார்க் தச்சரை எதிர் வரும் நவம்பர் 25ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு தெரிவித்து தென்னாபிரிக்க நீதிமன்றம் 165 000 அனுமதி வழங்கியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த தென்னாபிரிக்க பொலிஸ் அதிகாரி ஒருவர் இக்குவாரியோறியல் குனியே நாட்டில் சதிப்புரட்சியில் ஈடுபட்ட கிளர்ச்சியாளர்களுக்கு தட்சர் கோடிக்கணக்கான பனத்தை வாரி இறைத்துள்ளார்



என்றும், அதற்கான ஆவணங்களைத் தாம் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் விசாரணைக் குழுவினர், இந்தக் குற்றம் தொடர்பாக மார்க் தட்சரின் கணினி உட்பட்ட சொந்த ஆவணங்கள் பலவும் பரிசோதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தனர்.

மார்க் தட்சர் மீது சுமத்தப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக கருத்துத் தெரிவித்த மேலுமொரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி - மார்க் தட்சர் வெளிநாட்டு தீவிரவாதிகளுக்கு நிதியுதவி வழங்கியுள்ளமை தென்னாபிரிக்க நாட்டுச் சட்டங்களைப் பொறுத்தவரையில் பாரதூரமான குற்றமாகும். தென்னாபிரிக்க அரசு அயல் நாடுகளில் அமைதிச் சூழல் ஏற்படுவதற்கு தனது பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

யாராவது ஒருவர் தென்னாபிரிக்காவை விரும்பத்தகாத செயல்களுக்குப் களமாகப் பயன்படுத்தினால், அவர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## துருக்கியின் 2 பொறியியலாளர் ஈராக்கில் சுட்டுக்கொலை!

துருக்கி நாட்டைச் சேர்ந்த பொறியியலாளர்கள் அப்துல்லா ஒசிதிமர், அலி தாஸ்கின் ஆகியோர் ஈராக் நாட்டில் வேலை செய்து வந்தனர். இவர்கள் 2 பேரையும் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். ஈராக் நாட்டில் இருக்கும் துருக்கி படைகளை வெளியேறும்படி அவர்கள் மிரட்டல் விடுத்தனர்.

ஆனால், துருக்கி அரசு தீவிரவாதிகளின் கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை. இதையடுத்து கடத்தப்பட்ட 2 பொறியியலாளர்களையும் தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர். அவர்களது உடல்களை பாஜி நகரில் நடுவீதியில் தூக்கி எறிந்துவிட்டுச் சென்றுவிட்டனர்.

## 70 பயணிகளுடன் விமானம் கடத்தல்

லிபியா நாட்டில் இருந்து எரித்திரியா நாட்டுக்கு 70 பயணிகளுடன் ஒரு விமானம் சென்றது. நடுவானில் பறக்கும்போது, தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் விமானத்தை கடத்தினர். கடைசியில் இந்த விமானம் சூடான் நாட்டு தலைநகரான கார்டூமில் தரை இறங்கியது. அப்போது பாதுகாப்புப் படையினர் விமானத்தை சுற்றி வளைத்தனர்.

அவர்களிடம் விமானத்தை கடத்திய தீவிரவாதிகள் சரண் அடைந்தனர். இதனால் 70 பயணிகளும் எந்தவித காயமும் இல்லாமல் பத்திரமாக மீட்கப்பட்டனர். தீவிரவாதிகள் விமானத்தை கடத்தியது ஏன் என்று விசாரணை நடைபெற்று வருகிறது.

## கடத்தப்பட்ட தமது பிரஜைகளை

# விடுவிக்க உதவுமாறு நேபாளம் ஈ-ராக் அரசினை கோரியுள்ளது

உலக நோக்கு

ஈராக்கில் வைத்து இஸ்லாமிய ஆயுதக் குழுவொன்றினால் கடத்தப்பட்ட தமது நாட்டுப் பிரஜைகள் இருபதுபேரை, இஸ்லாமியக் குழுவிடமிருந்து மீட்டுத்தருமாறு நேபாள அரசு ஈராக்கின் இடைக்கால அரசைக் கோரியுள்ளது.

கடந்த இருபதாம் திகதி தம்மால் இருபது நேபாளியர்கள் பணயக் கைதிகளாக ஈராக்கில் வைத்து பிடிக்கப்பட்டதாக அன்சார் அல் சன்னா என்ற இஸ்லாமிய ஆயுதக்குழு இணையத் தளம் மூலம் தகவல் வெளியிட்டதன் பின்னரேயே நேபாளிய அரசாங்கம் இந்த உதவியைக் கோரியுள்ளது.

அத்துடன், கடத்தப்பட்ட கைதிகள் தொடர்பாக இஸ்லாமிய ஆயுதக்குழுவுக்கு மனுவொன்றினை நேபாளிய அரசு கடந்த திங்கள் அல் ஜசீரா மூலம் அனுப்பியுள்ளது. அத்துடன், கடத்தப்பட்டவர்களிடமிருந்து எந்தவித தகவலையும் தாம் இதுவரை பெற்றுக்கொள்ளவில்லையெனவும் நேபாள அரசு அறிவித்துள்ளது.

இஸ்லாம் மதத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக எவர் செயற்படுகின்றனரோ அவர்களுக்கு இது ஒரு உதாரணமான செயற்பாடென இஸ்லாமிய ஆயுதக்குழு தெரிவித்துள்ளது.

வீடியோ ஒளிநாடாவில் தாம் கட்டாயப்படுத்தப்பட்டே ஈராக்குக்கு அனுப்பப்பட்டதாக பணயக் கைதிகள் தெரிவித்தனர். ஈராக்குக்கு செல்லமுதல் தாம் ஜோர்தானில் தடுத்து வைக்கப்பட்டு அங்கிருந்து ஈராக்குக்கு அனுப்பப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமது தற்போதைய நிலைக்கு உள்ளூரில் வேலைக்கு ஆட்களைச் சேர்க்கும் முகவர்களையும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஆனால், இந்த தொழிலாளர்கள் ஜோர்தானுக்கே அனுப்பப்பட்டதாகவும், ஈராக்குக்கல்ல என




வும், சில வேளைகளில் ஜோர்தானைவிட ஈராக்கில் அதிக சம்பளம் வழங்கப்படுவதனால், இவர்கள் ஜோர்தான் ஊடாக ஈராக்குக்கு சென்றிருக்கலாமென இவர்களைச் சேர்த்த மூன்லைற் என்ற நிறுவனம் தெரிவித்தது.

நேபாளிய பிரஜைகள் எவரும் ஈராக்குக்கு செல்லக்கூடாதென தடை விதிக்கப்பட்ட நிலையில், இவர்கள் ஈராக்குக்கு சென்றதற்கு தாம் பொறுப்பல்ல எனவும், இவர்களது கடத்தலுக்கு தாம் தான் பொறுப்பேற்க வேண்டுமென இஸ்லாமிய ஆயுதக் குழுவினர் கேட்பது முறையல்ல என நேபாள அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், தடைசெய்யப்பட்ட பின்னரும் இவர்கள் ஈராக்குக்கு சென்றதனைக் கண்டுபிடிப்பதற்கு குழுவொன்று அலமைக்கப்பட்டுள்ளதாகவும், நேபாளிய அரசு தெரிவித்துள்ளது.

## இமாம் அலி பள்ளிவாசலிலிருந்து

# சதார் ஆதரவுப்படைகள் விலகிச் செல்ல சம்மதம்!

நஜாவ் நகரத்தில் உள்ள இமாம் அலி பள்ளிவாசலில் இருந்து விலகிச் செல்வதற்கும், தமது ஆயுதங்களைக் கீழே போடுவதற்கும் சதார் ஆதவுப் படைகள் சம்மதம் தெரிவித்துள்ளன.

இமாம் அலி பள்ளிவாசல் பகுதியில் உள்ள ஒலிபெருக்கிகள் மூலம் ஆயுதங்களை கைவிட்டு பள்ளிவாசல் பகுதியில் இருந்து விலகிச் செல்லுமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட சில மணித்தியாலயங்களில் தாம் இமாம் அலி பள்ளிவாசல் பகுதியினை விட்டு விலகிச் செல்வதாக சதார் ஆதரவுப் படைகள் தெரிவித்துள்ளன.

சதாருக்கு ஆதரவான படைவீரர்கள் சிலர், ஆயுதங்களை தமது வாகனங்களில் ஏற்றிச் செல்வதற்கு ஆயத்தமான நிலையில் காணப்பட்டதாக நஜாவ் நகரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை நாடுதிரும்பிய சியா முஸ்லிம் மதத்தலைவரான ஆயதுல்லா அலி சிஸ்ராணி நேற்று முன்தினம் சதார் ஆதரவுப்படைகளு



டன் சமாதான ஒப்பந்தம் ஒன்றினை கைச்சாத்திடுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளின் அடிப்படையிலே நஜாவ் நகரத்தில் கடந்த மூன்று வாரங்களாக இடம்பெற்ற மோதல்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

சமாதான ஒப்பநதத்துக்கு அமைய நஜாவ் நகரத்தில் தங்கியிருந்த அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் விலக்கப்பட்டு, ஈராக்கியப் பொலிஸார் காவற்கடமைகளில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

நஜாவ் நகரத்தில் 24 மணிநேர யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், நஜாவ் நகரம் அமைதியாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நஜாவ் நகர மோதல்கள் முடிவுக்கு கொண்டுவருவதற்கு சதார் ஆதரவு வழங்கியுள்ளமை தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள ஈராக்கிய இடைக்கால அரசு இது மாபெரும் வெற்றி எனத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள ஈராக்கிய இடைக்கால அரசின் பேச்சாளர்- சதார் வழங்கியுள்ள இந்த ஆதரவினை தாம் வரவேற்பதாகவும், சதார் அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொள்வதைத் தாம் வரவேற்பதாகவும், சதார் சுதந்திரமாக வாழ்வதற்கு அனுமதி அளிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

## ஈ-ராக் இளைஞர்களிடம் பச்சைகுத்தும் மோகம்

அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர் உட்பட பல்வேறு நாடுகளில் வேகமாக பரவி வந்த பச்சை குத்தும் மோகம், இப்போது போரினால் சீரழிந்துவிட்ட ஈராக்குக்கும் பரவிவிட்டது. குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் தான் இந்த மோகம் வேகமாக பரவி வருகிறது.



சதாம்ஹுசைன் ஆட்சிக் காலத்தில் உடலில் தங்களுக்கு பிடித்தமான உருவங்களை பச்சை குத்திக் கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டு இருந்தது. இப்போது தெருவுக்கு தெரு பச்சைக்குத்திக்கொள்ளும் நிலையங்கள் ஏராளம் ஈராக்கில் முளைத்துவிட்டன.

## தீவிரவாதிகளுக்கு நன்றி கூறும் குரங்கு

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தலைநகர் காத்மண்டுவை முற்றுகையிட்டு போராட்டம நடத்திவ்ந்தனர். நேபாளத்துக்குள் வாகனம் எதுவும் போக முடியாமல் சாலைகளை தடுத்துவிட்டனர். உணவுப் பொருள்களும் விநியோகம் ஆகாமல் தடுக்கப்பட்டது. காத்மண்டு நகருக்குள் சுற்றுலா பயணிகள்கூட போகமுடியாத நிலை ஏற்பட்டது.



இதனால், மக்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் எதுவும் கிடைக்கவில்லை. காத்மண்டு நகரில் குரங்குகள் கோவில் உள்ளது. இந்த குரங்குகளின் நிலையும் திண்டாட்டமாகிவிட்டது. அந்தக் குரங்குகள் பட்டினி கிடக்கும் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் காத்மண்டு முற்றுகைப் போராட்டத்தை தீவிரவாதிகள் வாபஸ் பெற்றுள்ளனர். இது அந்தக் கோவிலில் உள்ள குரங்குகளுக்கு நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது.

## 'நியூ' படத்தில்

# புதிய பாடலைச் சேர்க்க நீதிமன்றம் தடைவிதிப்பு

(சென்னை)

டைரக்டர் எஸ்.ஜே.சூர்யா - சிம்ரன் நடித்த 'நியூ' படம் தமிழ்நாடு முழுவதும் ஓடிக்கொண்டு இருக்கிறது. இந்தப் படத்தில் புதிதாக சூர்யா - கிரண் நடித்த பாடலை சேர்க்க டைரக்டர் முடிவு செய்தார்.

'மாமி சிவகாமி' என்று தொடங்கும் இந்தப் பாடலில் ஆபாசம் இருப்பதாக கூறி, சென்னை தணிக்கைக் குழு அதிகாரிகள் அனுமதி மறுத்து விட்டனர்.

அதற்கு பிறகு மும்பையில் உள்ள தணிக்கை சபைக்கு பாடல் காட்சி அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் சில காட்சிகளையும், பாடல் வரிகளையும் நீக்கச் சொல்லி திருத்தம் செய்த பின்னர் பாடலை சேர்க்க அனுமதி அளித்தனர்.

இதைத் தொடர்ந்து நியூ படத்தில் பாடல் காட்சியை சேர்க்க டைரக்டர் சூர்யா முடிவு செய்திருந்தார்.

இதற்கிடையே கிரண் நடித்த 'மாமி சிவகாமி' படப்பாடலை நியூ படத்தில் சேர்த்து திரையிட எதிர்ப்பு தெரிவித்து பெண் வழக்கறிஞர் அருண்மொழி சென்னை உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார்.

பாடலில் ஆபாசம் இருப்பதாகவும், தியேட்டரிலோ அல்லது வெளியிலோ பாடலை ஒளி - ஒலி பரப்புவதற்கு தடை விதிக்கவேண்டும் என்றும் கூறியிருந்தார்.

மனுவை தலைமை நீதிபதி சுபாஷன்ரெட்டி, நீதிபதி கற்பகவிநாயகம் ஆகியோர் விசாரணை நடத்தினார்கள். மத்திய தணிக்கை குழுவுக்கு அறிக்கை அனுப்ப உத்தரவிட்டனர்.

அத்துடன், பாடலை படத்தில் சேர்க்கவும், வெளியில் ஒலிபரப்பவும் தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இருபது பிஸ்டல் குழுக்கள் கொழும்புக்குள் ஊடுருவல்

## இராணுவ வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

கொழும்பு நகருக்குள் விடுதலைப் புலிகளின் இருபது பிஸ்டல் குழுக்கள் ஊடுருவியிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்வேறு அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களையும், கருணா குழுவைச் சேர்ந்தவர்களையும் கொலை செய்யும் நோக்குடனேயே இவர்கள் ஊடுருவியுள்ளனர்.

புலிகளின் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த 15 சிரேஷ்ட உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்திற்கு ஊடுருவியுள்ளனர். இவர்கள் தகவல்களைச் சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சமாதானப் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கவேண்டும்

## ஜப்பானியத் தூதுவர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியம் என ஜப்பானியத் தூதுவர் அகியோ சுட்டா தெரிவித்தார்.

கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களுக்கு விஜயங்களை மேற்கொண்ட ஜப்பானிய தூதுவர் அகியோ சுட்டா தனது விஜயம் குறித்து விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்போன்றை கொழும்பில் நடத்தினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த ஜப்பானிய தூதுவர்- நாடு பிளவுபடுவதை ஜப்பான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. ஆனால், சமாதான பேச்சுவார்த்தை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

சமாதான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் வடக்கு - கிழக்கு பகுதிகளின் அபிவிருத்திப் பணிகளுக்கு பெருமளவு உதவிகளை வழங்க ஜப்பானிய அரசாங்கம் தயாராக இருப்பதை சகல தரப்பினருக்கும் தனது விஜயத்தின்போது விளக்கிக் கூறியதாகவும் ஜப்பானிய தூதுவர் மேலும் தெரிவித்தார். (01)




## ஒலிம்பிக் பதக்க விபரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 32 | 37 | 27 | 96 |
| சீனா | 29 | 17 | 13 | 59 |
| ரஷ்யா | 21 | 24 | 33 | 78 |
| அவுஸ்ரேலியா | 17 | 14 | 16 | 47 |
| ஜப்பான் | 15 | 10 | 11 | 36 |
| ஜேர்மனி | 14 | 15 | 18 | 47 |
| பிரான்ஸ் | 11 | 08 | 12 | 31 |
| இத்தாலி | 09 | 09 | 11 | 29 |
| உக்ரெய்ன் | 09 | 04 | 08 | 21 |
| தென்கொரியா | 08 | 11 | 09 | 28 |
| பிரிட்டன் | 08 | 08 | 12 | 28 |
| ஹங்கேரி | 08 | 07 | 03 | 18 |
| ருமேனியா | 08 | 05 | 06 | 19 |
| கிறீஸ் | 06 | 05 | 04 | 15 |
| நெதர்லாந்து | 04 | 09 | 09 | 22 |
| கியூபா | 04 | 05 | 09 | 18 |
| சுவீடன் | 04 | 01 | 02 | 07 |
| நோர்வே | 04 | 00 | 01 | 05 |
| ஸ்பெயின் | 03 | 11 | 05 | 19 |
| கனடா | 03 | 06 | 03 | 12 |
| பிரேசில் | 03 | 03 | 02 | 08 |
| போலந்து | 03 | 02 | 05 | 10 |
| துருக்கி | 03 | 02 | 03 | 08 |
| நியூஸிலாந்து | 03 | 02 | 00 | 05 |
| ஒஸ்ரியா | 02 | 04 | 01 | 07 |
| பெலாரஸ் | 02 | 03 | 08 | 13 |
| எதியோப்பியா | 02 | 02 | 02 | 06 |
| ஸ்லோவாக்கியா | 02 | 02 | 02 | 06 |
| தாய்வான் | 02 | 02 | 01 | 05 |
| ஜோர்ஜியா | 02 | 02 | 01 | 04 |
| பல்கேரியா | 02 | 01 | 09 | 12 |
| ஈரான் | 01 | 01 | 01 | 04 |
| ஜமேக்கா | 02 | 01 | 01 | 04 |
| தாய்லாந்து | 02 | 00 | 04 | 06 |
| உஸ்பெகிஸ்தான் | 02 | 00 | 02 | 04 |
| சிலி | 02 | 00 | 01 | 03 |
| கென்யா | 01 | 04 | 01 | 06 |
| செக் குடியரசு | 01 | 03 | 04 | 08 |
| தென்னாபிரிக்கா | 01 | 02 | 02 | 05 |
| லிதுவேனியா | 01 | 02 | 00 | 03 |
| சுவிற்சர்லாந்து | 01 | 01 | 03 | 05 |
| இந்தோனேசியா | 01 | 01 | 02 | 04 |
| சிம்பாப்வே | 01 | 01 | 01 | 03 |
| மொரோக்கோ | 01 | 01 | 00 | 02 |
| டென்மார்க் | 01 | 00 | 06 | 07 |
| ஆர்ஜென்ரீனா | 01 | 00 | 04 | 05 |

## மருத்துவபீட மாணவியின் சகோதரன்

# துணைவேந்தரது அலுவலகத்தின் உள்ளே அமர்ந்திருந்து போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி புஸ்பமாலாவின் விடயத்தில் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையெனத் தெரிவித்து புஸ்பமாலாவின் சகோதரன் நேற்று துணைவேந்தர் அலுவலகத்தின் உள்ளே இருந்து போராட்டத்தில் ஈடுபட்டார்.

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தால் உறுதியளிக்கப்பட்டபடி விசாரணைக் குழு அமைக்கப்படவில்லையென்றும், குறிப்பிட்ட மாணவியின் பரீட்சைப் பெறுபேறுகள் மீளத்திருத்தப்படவில்லையென்றும் தெரிவித்த குறித்த மருத்துவபீட மாணவியின் சகோதரன் இப்பிரச்சினைகள் தொடர்பாக உரிய உறுதிமொழி வழங்கப்படும்வரை தான் துணைவேந்தர் அலுவலகத்தை விட்டுச் செல்லப்போவதில்லையெனவும், தெரிவித்து துணைவேந்தர் அலுவலகத்தில் இருந்தார்.

பின்னர் இடம்பெற்ற பேரவைக்கூட்டத்தினைத் தொடர்ந்து வெகுவிரைவில் குறிப்பிட்ட மாணவி தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வு வழங்கப்படும் என துணைவேந்தர் உறுதியளித்ததைத் தொடர்ந்து அவர் துணைவேந்தர் அலுவலகத்தைவிட்டு வெளியேறிய போதும், வழங்கிய உறுதிமொழியினை விரைவாக செயற்படுத்தக்கோரி - தொடர்ந்தும் பல்கலைக்கழக வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். (லெ)

## ஹபரண விபத்தில் இரு யாழ். வாசி பலி!

(திருகோணமலை)

ஹபரண - கிரிவவ பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்து ஒன்றில் திருகோணமலையைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் வசித்து வந்த இருவர் உயிரிழந்தனர்.

பஸ் ஒன்றுடன் ஹையேஸ் வான் மோதியதிலேயே அந்த வானில் சென்ற ஆணும் பெண்ணும் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஆறுபேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹையேஸ் வான் ஒன்றில் கிண்ணியாவுக்குச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### இராணுவ உளவாளி...

மா அதிபர் இந்திர டி சில்வா - இந்தக் கொலைச்சம்பவம் தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் தமக்கு எழுந்திருப்பதாக குறிப்பிட்டார்.

இராணுவத்தினருக்கு தகவல் அனுப்பிய உளவாளிகள் முன்னர் கொலைசெய்யப்பட்ட முறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தச் சம்பவம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் ஏற்படுகின்றன.

அத்துடன், இந்தக் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்ட அவர் மேலதிக விபரங்கள் எதையும் வெளியிடவில்லை.

இந்தச் சமபவத்தையடுத்து குறிப பிட்ட வீட்டிலிருந்து பொலிஸாரால் றிப்பீட்டர் துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டது.

### உளவாளிகள்...

இராணுவத்தினர் இல்லை.

போர்நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டிருக்கும் விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் இதில் கவனம் செலுத்தவேண்டும். குறிப்பாக விடுதலைப் புலிகள் கொலைசெய்வதை இந்தக் காலப்பகுதியில் நிறுத்தவேண்டும்.

கடந்த இரண்டரை வருட போர்நிறுத்த காலப்பகுதியில் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இராணுவத்திற்கு தகவல் கொடுத்த புலனாய்வாளர்கள் என 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர். குறிப்பாக கிழக்கு மாகாணத்திலும், கொழும்பிலும் இந்தக் கொலைகள் இடம்பெற்றுள்ளன.

எதிர்காலத்தில் இப்படியான கொலைகளை நிறுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### யுத்த. நிறுத்தத்தை...

யுத்தநிறுத்த உடன்படிக்கை மூலம் நேரடி மோதல்கள் மட்டுமே தவிர்க்கப்பட்டுள்ளன.

இத்தகைய சூழ்நிலை நிலவுகிறபோதிலும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதது விசனத்துக்குரியது.

இத்தகைய சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேச நாடுகளின் பங்களிப்பு அவசியம். இது தொடர்பாக வெளிநாட்டுத் தூதுவர்களுடன் ஆலோசனைகள் நடத்தியுள்ளதாகவும் தேரர் மேலும் தெரிவித்தார்.

### நாட்டின் பாதுகாப்பு...

கள் அதிகரித்துள்ளன.

நாளுக்கு நாள் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனை பாதுகாப்புக் பொறுப்பாக உள்ள ஜனாதிபதியும் அரசாங்கமுமே பொறுப்பேற்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இருள் இனி விலகும் நூல் நேற்று வெளியீடு

போராளி தமிழ்க்கவி எழுதிய "இருள் இனி விலகும்" எனும் நாவல் வெளியீடு நேற்று கிளிநொச்சியில் அமைந்த பண்பாட்டு மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

இந்த விழாவில் தமிழீழ தேசியக் கொடியினை செஞ்சோலை பொறுப்பாளர் ஜனனி ஏற்றிவைத்தார்.

தலைமையுரையினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் நிகழ்த்தினார்.

இதையடுத்து இந்த நூலை மாலதி படையணித் சிறப்புத் தளபதி தேணல் விதுஷா வெளியிட்டு வைக்க, குகா சங்கர் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து எழுத்தாளர் சாந்தன், மகளிர் வெளியீட்டுப் பிரிவினைச் சேர்ந்த மலைமகள் ஆகியோர் நூல் ஆய்வினை நிகழ்த்த, சிறப்புரையினை யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பருதி நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து பதில் உரையினையும், நன்றி உரையினையும் தமிழ்க்கவி ஆற்றினார். இநத நூல் வெளியீட்டு விழாவில் போராளிகள், இலக்கியவாதிகள், பொது மக்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

# ஓய்வூதிய கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படுமாம்

## அமைச்சர் அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கும்போது ஓய்வூதிய உயர்வும் வழங்கப்படுமென பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் அமரசிறி தொடங்கொட இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஓய்வூதியத்தை 1997-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து பின்நோக்கியதாக அதிகரிப்பதற்கு அமைச்சரவையில் உபகுழுவொன்று சிபார்சு செய்துள்ளது.

இந்த வகையில் நிலுவைத் தொகையாக 6000 கோடி ரூபா வழங்கப்படவேண்டும்

ஓய்வூதியத் திணைக்களத்தின் கிளை அலுவலகங்கள் ஒவ்வொரு மாவடடத்திலும் திறக்கப்படும். மேலும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பற்றி அவதானிப்பதற்கு பிரதேச செயலகங்களில் 50 பட்டதாரிகள் நியமிக்கப்பட இருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# சுயாதீன தேர்தல் ஆணைக்குழு; நியமனங்ளை ஜனாதிபதியே இழுத்தடிப்பு

## சபாநாயகர் குற்றச்சாட்டு

சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கான நியமனங்கள் வழங்குவதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே இழுத்தடித்து வருவதாக சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசியலமைப்பு சபைதான் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை நியமிப்பதற்கு தாமதம் காட்டிவருவதாக, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பாக விளக்கமளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அனுமதியின்றி சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவிற்கான நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

இந்த நியமனங்களை ஜனாதிபதி சந்திரிகா அங்கீகரிப்பதற்கு தாமதம் காட்டிவருவதாலேயே, சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கான நியமனங்கள் தாமதமடைவதாக சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக சபாநாயகர் லொக்குபண்டார, தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.


## நமது ஈழநாடு விளம்பரக் கட்டணங்கள்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூபா 10,000 | ரூபா 22,000 |
| அரைப்பக்கம் | ரூபா 5,000 | ரூபா 12,000 |
| கொலம் செ.மீ Colum cm | ரூபா 50 | ரூபா 120 |

## மரண அறிவித்தல்

7cm x 2 கொலம் (colum) அளவுடைய மரண அறிவித்தல் விளம்பரங்கள் இலவசமாகவே பிரசுரிக்க ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு மேற்பட்ட அளவுக்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# செல்வச்சந்நிதி தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## முருகனை வழிபடுவோம் மகிழ்ச்சியைப் பெறுவோம்



தேவர்கள் அசுரர்களால் வதைபட்டுக்கொண்டிருந்த போது, சிவபெருமானிடம் தமது குறைகளைத் தேவர்கள் முறையிட்டனர்.

தேவர்களின் குறைகளைப் போக்குவதற்காக தனது நெற்றிக் கண்ணில் இருந்து ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்து, அந்த ஆறு தீப்பொறிகளிலும் இருந்து தோன்றிய கடவுளே ஆறுமுகப் பெருமான் ஆவார்.

ஆறுமுகப் பெருமான் அன்பர்களுக்கு ஆறுதலைத் தரும் கடவுளாக வழிபடப்பட்டுவருகின்றான்.

கலியுகம் என்பது துன்பங்கள குறைந்த யுகமாகும். இந்த துன்பம் குறைந்து, உலகில் துன்பங்களை நீக்கும் யுகக் கடவுளாக முருகப் பெருமான் வழிபடப்படுகிறான்.

கலியுகத்தில் கந்தனாக வழிபடப்படுகின்ற கடவுள் ஈழத்திலும் பல இடங்களில் குடிகொண்டு அருளாட்சி புரிகின்றான்.

மாவிட்டபுரத்திலே மாவைக் கந்தனாகவும், நல்லூரிலே நல்லூர் குமரனாகவும், கதிர்காமத்துக் கந்தனாகவும் எனக் கோயில் கொண்டிருக்கும் கடவுள். தொண்டைமானாற்றுப் பதியிலே சந்நிதியானாக விளங்குகின்றான்.

ஆண்டவன் சந்நிதியில் நிம்மதி தேடும் அடியவர்களுக்கு 'சந்நிதி' யாக விளங்குவது தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயமாகும்.

ஏழை, எளியவர்கள் எளிதாக வழிபடக்கூடியவகையில், ஆடம்பரமற்ற முறையில் குடிகொண்டிருககின்றான். தொண்டைமானாறு சந்நிதியான் எந்தவிதமான வேறுபாடுகளுமின்றி மக்கள் - முருகன் சந்நிதியில் கூடுவார்கள். அன்னதானக் கந்தனாக அமர்ந்திருக்கும் முருகன் ஆலயத்தில் பூசைகள், மந்திரங்களின் உச்சரிப்பின்றி நடைபெறுகின்றன.

சந்நிதி ஆலயத்தில் பூசைகள் செய்யும் பூசகர், வாய்கட்டியே பூசைகளை நடத்துகின்றார். அடியவர்களை அமுது செய்விக்கும் படியாக அடியார் மண்டபங்கள் சூழ சந்நிதியான் வீற்றிருந்தான். இன்று ஓரிரு மடங்களைத் தவிர ஏனைய மடங்கள் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன.

சந்நிதியான் ஆலயத்தில் காணப்பட்ட தேர் எந்தவொரு ஆலயத்திலும் காணப்படாத தேராக இருந்தது. மிக்க உயரம் வாய்ந்ததும், தேர் அசையும் தோறும் மணிகள் ஒலிக்கின்றதுமான தேர்ப்பவனி நடைபெற்றுக்கொண்டிருந்தது.

தமிழ்க் கடவுள் முருகனின் தன்னிகரற்ற அருளாட்சியைப் பொறுக்க முடியாத தமிழன் மீதும், தமிழ் மக்கள் மீதும் வெறுப்புக் கொண்டவர்களின் செயல்களால் சந்நதியான் ஆலயத்தில் அமைக்கப்பட்டிருந்த தேரும் அழிவுக்குள்ளானது.

தற்போது எரியுண்ட நிலையில் காணப்படும் தேர்குறி பார்த்து வைத்திருக்கும் கட்டடத்தின் உயரமே தேரின் அளவையும், சிறப்பையும் கற்பனைக் கண்களால் கண்டு மகிழ்ச்சி செய்வதாய் இருக்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தேரொன்று வலம் வந்த வீதியில் மீண்டும் பொலிவுபெற்று, தேர்ப் பவனி காணும் பெருவிருப்புக் கொண்ட சந்நிதியான் அடியார்களின் முயற்சியினால் புதுத்தோ ஒன்று உருவாக்கப்படடது.

இந்த ஆண்டின் மஹோற்சவத்தில் இன்று நடைபெறும் தேர்த்திருவிழாவில் புதுத் தேர்ப் பவனி இடம்பெறவுள்ளது.

வல்லை வெளியை ஒரு பககமாகவும், வடலி பனை முதலியவற்றை இன்னொரு பக்கமாகவும், நெல்வயல்களை இன்னோர் பக்கமாகவும் கொண்டு, சந்நிதியில் கோயில் கொண்டிருக்கும் குமரன் இன்று புதுத்தேரில் பவனி வருகின்றான்.

ஆலயத்தின் பின்னால் சாலைகளின் குளிர்ச்சிகளையும், ஆலயச் சூழல்களில் மரங்கள் தருகின்ற நிழல்களின் குளிர்ச்சியையும் கொண்டு, உறைந்திருக்கும முருகனின் பதிக்குச் சென்று, மனதில் குளீர்ச்சி பெற்றுக்கொள்வோம். தேவர்களின் குறைதீர்த்து சூரர்களை வதைத்த சேனாதிபதியான முருக்ப்பெருமான் தமிழர்களின் தெய்வமாவான். தமிழர்களின் தொல்லைகள், இன்னல்களைப் போக்கி அருள் புரியப் புதுத் தேரிலே ஏறி வருகின்றான். மயிலேறி வருகின்ற முருகனை அடியார் மனங்களிலே இருத்தி வழிபடுகின்றனர். தன்னை வணங்கும் அடியவர்களின் குறைகளைப் போக்குவதற்கென்றே தோன்றியவன் முருகப் பெருமான். அவனின் புது ரதப் பவனி கண்டு கண்களில் ஆனந்த நீரருவி பாயட்டும்.

- பூ.நகுலன் -


பாவனையாளருக்குப் பக்குவமாய்
வர்த்தகப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாவும்
வழங்குமிடம்

**யமுனா ஸ்ரோர்ஸ்**

பிரதான வீதி,
நெல்லியடி கரவெட்டி
T.P :- 021 - 3217

C/2996)



சகல விதமான அழகு சாதனப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள் DSI பாதணிகள்
அனைத்துக்கும்

**பிரியங்கா**

V.V.T. வீதி, உடுப்பிட்டி.



வடமராட்சியில்...

**kit** Dialog GSM இன் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்

**THE PHONE SHOP**

பிரதான வீதி, பஸ் நிலையம் முன்பாக
நெல்லியடி
கையடக்க தொலைபேசிகள்,
உதிரிப்பாகங்கள், தொலைபேசி
இணைப்புக்கள் என்பவற்றை
உத்தரவாதத்தோடு
பெற்றுக்கொள்ளலாம்.
கிற்காட் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
கையடக்கத் தொலைபேசி
திருத்தவேலைகளுக்கு நம்பிக்கையான
ஸ்தாபனம். வாடிக்கையாளர் சேவை

C/2997)

T.P NO:- 021 - 226 3770 0777 570110



யாழ்.மக்களுக்கோர் புத்துணர்வூட்டும்
புதுப் பொலிவுடன் திகழும்

**பவர் செலூலர் ரேடிங் கம்பனி**

எமது சேவை ஸ்ரீலங்கா ரெலிக்கொமின் துணை
நிறுவனமாகிய மொபிட்டல் பவர் செலூலர் ரேடிங் கம்பனி
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
கிளை நிறுவனம் 205\1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(ராஜா தியேட்டர் அருகில்)
அலுவலக தொலைபேசி:- 021 222 7070, 0712 399220
Hot Line - 0777 281521





**ஆனந்த் பந்தல் சேவையினரின்**

**விரிவாக்கப்பட்ட (மேல்மாடி) வீனஸ் பலஸ்**

**திருமண வைபவங்கள்,**

**பூப்புனித நீராட்டு விழாக்களுக்கான**

மின்விசிறிகள், மின்குமிழ்கள் பொருத்திய சொக்கட்டான் மணப்பந்தல்கள், பிளாஸ்ரிக் கதிரை, பாய், மாலை, (மணவறை) (பூ மணவறை) சமையல் பாத்திரங்கள், பொக்ஸ் செற், CDக்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் ஓடர் செய்திட

இதோ முகவரி: V.ஆனந்த், முருகன் கோவில் வீதி, நெல்லியடி. T.P.0777290536

C/2998)

# செல்வச்சந்நிதி தேர்த்திருவிழா சிறப்பிதழ்

தேரேறிவரும் முருகா வினைபோக்கி அருளளிப்பாய்...
நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளைச் செய்து பெற்றுக் கொள்ள



நாடவேண்டிய ஸ்தாபனம்



வைஷ்ணவி நகைப்பூங்கா

தங்கப் பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

(C/2965) பிரதான வீதி, நெல்லியடி.

அன்னதானக் கந்தனிவன் அனைவருக்கும் அமுதளித்து அருள்புரிவான்

பலசரக்குப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், கேக் தயாரிப்புப் பொருட்கள் மற்றும் பாண், பணிஸ், பிஸ்கட், கேக் வகைகள், கேக் பேக்கிங், ஐசிங், கேக் ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும். அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

கல்பனா ஸ்ரோர்ஸ் & பேக்கரி

உரிமையாளர்
V.சிறிகுமார் (பாபு) - T.P. 0777 - 238647 (C/2972) பிரதான வீதி, அச்சுவேலி.

புள்ளிமயில் ஏறிவரும் கந்தனிவன் புதுத்தெம்பு தந்து காத்திடுவான்
தங்கம், வெள்ளி போன்ற நகைகளை குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொள்ளவும், மற்றும் நவீன டிசைன் தங்க ஆபரணங்களையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்





ஸ்ரீ காமாட்சி நகைத் தொழிலகம்

(C/2978) நவீன சந்தை, அச்சுவேலி.



அன்பர்க்கு அருளளிக்கும்
ஆண்டவனாம் அடியார்
மனங்களிலே உறைந்திடுவாய்

மெற்றோ வைன் ஸ்ரோர்ஸ்

(C/2964) பிரதான வீதி, நெல்லியடி.

ரதத்திலே வருகின்றான் வடிவேலன் அடியார்
துன்பங்கள் துடைத்திடுவான்

கட்டுமாணப் பணிக்கான சகல பொருட்களையும் பெற்றுக்கொள்ள

கணேசன் காட்வெயார்

பிரதான வீதி, நெல்லியடி.

சைவ, அசைவ உணவுகளை ஓடர்களுக்குச் செய்து பெற்றுக்கொள்ள

இந்திரா கபே

பிரதான வீதி, நெல்லியடி.

(C/2966)

# கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் தீர்த்தோற்சவ சிறப்பிதழ்

## முருகப்பெருமானின் தீர்த்தோற்சவ ஆசியுரை

கலியுகவரதனாகிய கந்தப் பெருமான் தேரேறிவந்து, சகல மக்களுக்கும் காட்சிகொடுத்த அடுத்த நாள் தீர்த்தோற்சவம். இந்த தீர்த்தோற்சவம் அன்றைக்கே எம்பெருமானுக்கு பூரண அபிஷேகம் ஆராதனை செய்து, விஷேச பூசைகள் முடிந்து, வீதி உலா வந்து, அஸ்திர தேவருக்கு தீர்த்தத் தலத்தில் கங்கா, யமுனா, சரஸ்வதி, கோதா, நர்மதா பஞ்ச தீர்த்தங்களையும் அழைத்து எம் பெருமான் முன்னிலையில் அஸ்ட தேவருக்கு தீர்த்தவிழா நடக்கிறது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் போக்கி (தீர்த்து) அடியார்களை ஆட்கொள்ளும் நன் நாள் தான் இந்த தீர்த்தத் திருவிழா. ஆகவே இந்த தீர்த்தத்தில் சகல மக்களும் கலந்து தீர்த்தமாடி வழிபட்டு, தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களையும் தீர்த்து வைக்கும்படி எம்பெருமானை வேண்டுதல் செய்வோமாக.

மகாதேவா ஆச்சிரமத்தின் சார்பில் நல்ல ஆசிகளைத் தெரிவிக்கின்றோம்.

கணேசானந்த மகாதேவ சுவாமிகள்.
மகாதேவா ஆச்சிரமம், கிளிநொச்சி.



## ஆலய அட்சகரின் வாழ்த்து

முருகனின் திருவருள் எங்கும் எப்பொழுதும் அனைவருக்கும் கிட்டட்டும்.

அகில உலகமும் அறியும் வண்ணம் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் இன்று பெரும் வளர்ச்சியடைந்து மஹாகும்பாபிஷேகத்தின் பின் இரண்டாம் வருட மஹோற்சவம் சிறப்புற நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. திருவருள் விளங்கும் முருகப் பெருமான் தன் அருட் பார்வையால், பக்தர்கள் அனைவருக்கும் அருள் மழைபொழிந்து வருகிறார். கருணை வள்ளலாம் திருமுருகனுக்கு இன்று தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது. இந்தத் தீர்த்தோற்சவம் அருளைக் குறிக்கின்றது. எனவே ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத முருகப்பெருமான் திக்கனைத்தும் செறிந்து, அனைத்துப் பக்தர்களுக்கும் அருள் புரிந்து உய்யும் வகை செய்யவேண்டுமென வேண்டுவதுடன் தீர்த்தோற்சவவிழா சிறப்பாக நடைபெற எனது நல்வாழ்த்துக்கள்.

*ஆலய அட்சகர்,*
*ஜெ. ஜெயந்தசர்மா,*
*கிளிநொச்சி கந்தசாமி கோயில்.*

## மகோற்சவ குருவின் ஆசியுரை



ஆலய உற்சவங்களில் மகோற்சவ மானது நித்திய, நைமித்திய கிரியைகளில் ஏற்படும் குறைகளை, தவறுகளை நிறைவு செய்யும் வகையில் நிகழ்த்தப்படும். கிரியா மார்க்க பூசை வழிபாடாகும். இதில் யாகம், த்வஜஸ்தம்பம் போன்றன பிரதான இடம் வகிக்கின்றன. இந்த மஹோற்சவமானது ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம், த்ரோபவம் அனுக்ரகம் ஆகிய இறைவனுடைய பஞ்ச கிருத்தியங்களை குறிக் கின்றன. இதில் தீர்த்தோற்சவமானது அனுக் கிரகத்தைக் குறிக்கின்றது. ஆகவே, இந்த தீர்த்த உற்சவ தினத்தில் எம்பெருமானைத் தொழும் அடியார் அனைவருக்கும் நல்லனவெல்லாம் நடைபெறவும், சகல சௌபாக்கியங்களும் கிடைக்கவும், கருணை வள்ளலாம் திருமுருகனை வேண்டி எனது நல்லாசிகளை வணங்குகிறேன்.

திருவாய் வருவாய்
அருள்வாய் குகனே.

மகோற்சவக்குரு சிவாசாரியார் திலகம்
சிவஸ்ரீ. ஜெகதீஸ்வரக் குருக்கள் கிளிநொச்சி.

நாள் என்செய்யும் வினைதான் என்செய்யும்
எனைநாடிவந்த கோள் என்செய்யும்
கொடுங்கூற்று என்செய்யும் குமரேசர்
இருதாளும் சிலம்புஞ் சலங்கைத் தண்டையும்
சண்முகமும் தோளுங் கடம்பும் எனக்கு
முன்னே வந்து தோன்றிடினே.

## தீர்த்தோற்சவ மகத்துவம்



பழம்பெருமை மிகு எம் கந்தசுவாமி கோவிலின் பெருவிழாவில் தீர்த்தோற்சவம் அருளளுக்குரிய பெருவிழாவாகும். இறைவனின் அருள் பூரணமாக மக்களுக்கு கிடைக்கும் இப்பெருவிழாவில் சகலரும் கலந்து முருகன் அருள்பெறும் வண்ணம் திருநெறிக்கழகம் வேண்டுகின்றது.

இத்தினத்தில் துன்பங்களின் மத்தியில் கோயிலின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யும் அனைவருக்கும் முருகன் அருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம். எமது கழகம் ஆன்மீகப் பாதையில் கிளிநொச்சியில் சமயப்பணி செய்ய கிளிநொச்சி கந்தசுவாமிகோயில் பரிபாலன சபை பல வழிகளிலும் உதவி வந்ததை நன்றியுடன் எண்ணிப் பார்க்கின்றோம். மேலும் எம்மக்கள் சிறப்புடனும், அமைதியுடனும் வாழ மீண்டும் எல்லாம் வல்ல முருகனை வேண்டுகின்றோம்.

முருகனே தோன்றாத்துணை

வே. மகாலிங்கம்
தலைவர் - திருநெறிக்கழகம்


விளம்பர அனுசரணையாளர்:

கிளி நகரில்
வாகன, அரிசி ஆலை, உழவு இயந்திர உதிரிப்பாகங்கள், வீட்டு மின் உபகரணங்கள் மற்றும் இரும்பு உபகரணங்கள் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
பிள்ளையார் பல்பொருள் வாணிபம்
இல.308, யாழ்சாலை, கிளிநொச்சி.
கிளை - யோகபுரம், மல்லாவி.
(2808)

சகலவிதமான சைவ உணவு வகைகளுக்கு சிறந்த உணவகம்
கானநிலா சைவ உணவகம்
யாழ்சாலை, கிளிநொச்சி.
(2810)

சிவகுரு கட்டிடப் பொருள் உந்துருளி வாணிபம்
உங்கள் சிறந்த தெரிவுகள் எமது காட்சியறைகளில்
(வன்னிப் பகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்)
இல. 496,496/1 நாயகி கட்டிடம், யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.
(2815)

சிறந்த, சுவையான, தரமான உணவு வகைகளுக்கு கிளிநொச்சியில் நீங்கள் நாடவேண்டிய இடம்
கண்ணன் உணவகம்
யாழ்சாலை, கிளிநொச்சி.
(2811)

சகலவிதமான பாடசாலை உபகரணங்களுக்கும், புத்தகங்களுக்கும் தரமான பிரிண்டிங் வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்
சக்தி பதிப்பகம்
சக்தி அருளகம்
யாழ்சாலை, கிளிநொச்சி.
(2813)

கிளிநொச்சியில் சகலவிதமான மளிகைப் பொருட்களுக்கும் ஒரே சிறந்த ஸ்தாபனம்
எழுகதிர் பல்பொருள் விற்பனை நிலையம்
யாழ்சாலை, கிளிநொச்சி.
(2809)

அனைத்துவகைப் பாமா வகைகளுக்கும், மருந்து வகைகளுக்கும் கிளி நகரில் சிறந்த ஒரே மருந்தகம்
மது மருந்தகம்
யாழ்சாலை, கிளிநொச்சி.
(2812)

# இந்து விழிப்புணர்வு வார நிகழ்வு

இலங்கை சிந்மயா மிஸசன் ஏற்பாட்டில் "இந்து விழிப்பு வார" நிகழ்ச்சிகள் நல்லூரில் மிகச் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

நல்லூர் உற்சவகாலங்களாகிய இப்போது, நல்லூர் தெற்கு வீதியில் 24 ஆம் திகதி தொடக்கம் நாளை வரை இடம்பெறுகின்ற இந்த இந்து விழிப்பு வார நிகழ்வில் "நாங்கள் பூரணத்துவமான இந்துக்களாக வாழ்வோம்" என்ற கருப்பொருளாக இந்து ஆன்மீகத் தத்துவங்களைப் போதிக்கின்ற திரைப்படங்களை அகலத்திரையில் திரையிட்டுக்காட்டுவதோடு, வினாடி வினாப் போட்டிகள், வில்லிசைகள், நாடகங்கள் மூலம் இந்து சமய விழுமியங்களை பரப்பிவருகின்றனர்.

தினமும் இரவு ஏழுமணி தொடக்கம் இடம்பெறும் இந்த நிகழ்வில் பெருந்தொகையான அடியார்கள் கலந்துகொண்டு இந்து சமயத் தெளிவு பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.


M.G.M உற்பத்திப் பொருட்களின்
ஏக விநியோகஸ்தர்களான

## முகமது கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ்

இல.777, கே.கே.எஸ். வீதியில் மீண்டும்
தங்களுடைய வியாபாரத்தை ஆரம்பித்து விட்டார்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள்

ஆட்டா மா, வறுத்த சிவப்பு அரிசி மா, வறுத்த வெள்ளை அரிசி மா, வெள்ளை அரிசி மா, கடலை மா, குரக்கன் மா, உழுந்து மா, கோதுமை குறுணல்

ரோஸ் ரசம், நண்ணாரி ரசம், நெல்லி ரசம், கிறேப் சர்பத், பஷன் ரசம், மிக்ஸ் புரூட் ரசம், அன்னாசி ரசம், தேசிக்காய் ரசம்

நெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், ஒலிவ்வெண்ணெய்

வினாகிரி, அயடீன் உப்பு, ஐசிங் சீனி, பேக்கிங் பவுடர், அப்பச்சோடா, கொக்கோ பவுடர், சிற்றிக் அசிட்.

தேசிக்காய் ஊறுகாய், வெள்ளைப் பூடு ஊறுகாய், மோர் மிளகாய்

வெள்ளைப் பிட்டுக் கலவை, சிவப்புப் பிட்டுக் கலவை, திடீர் தோசைக் கலவை, திடீர் அப்பக் கலவை

சீயாக்காய் பவுடர்

பிளீச்சிங் பவுடர்

ஆகியவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
M.G.M. T.P :- 0777 741195
0777 741295
(C/2961)



## பரிசுகள் காத்திருக்கின்றன

வெண்புறா WHITE PIGEON

### வாய்ப்புக்களைத் தவறவிடாதீர்கள்

### மாபெரும் கட்டுரை, சித்திரப்போட்டிகள்

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் கண்ணிவெடி செயற்பாடு தொடர்பான கட்டுரை, சித்திரப் போட்டிகளினை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

**பரிசு விபரம் கட்டுரை**

1ஆம் பரிசு 6,500/=
1ஆம் பரிசு 3,500/=
3ஆம் பரிசு 2,500/=
இரு ஆறுதல் பரிசுகள் தலா 750/=

**பரிசு விபரம் சித்திரம்**

1ஆம் பரிசு 7,500/=
2ஆம் பரிசு 5,000/=
3ஆம் பரிசு 3,000/=
இரு ஆறுதல் பரிசுகள் தலா 750/=

**கட்டுரை**

1. கண்ணிவெடி நடவடிக்கையில் (Mine action) ஈடுபடும் நிறுவனங்களின் சமூகத்திற்கான பங்களிப்பு
2. எமது சமூகத்தில் கண்ணிவெடி அபாயக்கல்வியின் முக்கியத்துவம்.
3. கண்ணிவெடியற்ற எதிர்காலத்தை உருவாக்க மக்களின் பங்களிப்பு.

**சித்திரம்**

"கண்ணிவெடிகளில் இருந்து எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாப்போம்" எனும் கருப்பொருளினை வெளிப்படுத்த வேண்டும்.

*போட்டி நிபந்தனைகள் பற்றிய விபரங்கள் நமது ஈழநாடு - 15.08.04, உதயன் - 16.08.04 பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

மேலதிக விபரங்களுக்கு,
வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்,
இல.63 பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல:- 021222 5932
(C/3016)



## ELECTREX POWER TOOL



இலெக்ரெக்ஸ் மின்னியக்கக் கருவிகள் தரத்தில் உயர்ந்த இந்தியநாட்டுத் தயாரிப்பான இலெக்ரெக்ஸ் மின்னியக்கக் கருவிகள் தற்பொழுது இலங்கைச் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் அறிவித்துக்கொள்கிறோம்.

தச்சுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், மரச் செதுக்கு வேலைப்பாடுகளைச் செய்பவர்கள், மர விற்பனையாளர்கள் மற்றும் ஆக்கத்திறன் கொண்ட தொழில் துறைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் ஆகியோர்களுக்கு மிகச் சிறந்த பயனைத் தரும் இக்கருவி அன்றாட வீட்டு வேலைகளை இலகுவாகவும், மரவேலைகளைக் கச்சிதமாகவும் பூர்த்தி செய்வதற்கும் துணைபுரிகின்றது.

இலங்கையின் தேவைகளுக்கேற்ப நவீன தொழில்நுட்பத்தையும், உயர் தரத்தையும் கொண்டதாக உற்பத்தி செய்யப்பட்டு மிகவும் குறைந்த விலையில் உங்களுக்குக் கிடைக்கும் இலெக்ரெக்ஸ்/ஏ.ரீ.ஏ மின்னியக்கக் கருவிகள் உற்பத்தியில் அதியுயர் ஸ்தானத்தை வகிக்கும் தயாரிப்பொன்றாகும்.

**இன்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியல் மேலதிக தகவல்களைப் பெறலாம்.**



### உள்நாட்டு இலெக்ரெக்ஸ் காரியாலயம்

ஏ.ரீ.ஏ (இன்டர்நெஷனல்)லிமிடட்,
176-1/3, துடுகெமுனு வீதி,
கொஹுவலை, நுகேகொடை
ஹொட்லைன் 011 2854240
011 2854200
011 077 3052814
Fax 011 2853063
தொலை நகல்
sarushdole@hotmail.com

ISO 9001 Co.

வரையறுக்கப்பட்ட 1 வருட உத்தரவாதம்

(C/3017)

**இலெக்ரெக்ஸ் தொழில்நுட்பவியலாளர்களின் தோழன்**